Regd. No. M. 4593. KUDI ARASU 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924. தனிப்பிரதி அணா ரூ. 0-1-0

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

மலர் 18 ஞாயிறு, 11-8-1940 ஆடி-மீ 27உ. இதழ் 44

## யார் நாஸ்திகர்?

வேதாகமங்கள் என்று
வீண்வாதம் ஆடுகின்றீர்
வேதாகமத்தின்
விளைவறியீர்—சூதாகச்
சொன்னதலால் உண்மை
வெளிதோன்ற உரைத்தல் இலை
என்ன பயனோ இவை.

இப்பாடலைப் பாடியவர் சிவஞானம் பெற்று பரம ஆஸ்திக சைவ சித்தாந்த சிரோமணியாக விளங்கிய இராமலிங்க சுவாமிகளவர்கள். இப்பாடலில் என்ன கூறப் பட்டிருக்கிறதென்பதை உற்று நோக்குமாறு வேண்டுகிறேன். இராமலிங்க சுவாமிகள் இருப்பாடல்கள் யாவற்றையும் சேர்த்து திருவருட்பாவென்னும் பெயரால் அச்சிடப்பட்ட பெரும் புத்தகத்தில் ஆறாந்திருமுறையில் இப்பாடல் காணப்படுகிறது. வேதம் ஆகமம் எனும் அவைகள் வீண் வாதத்துக்குச் சூதாகச் சொன்னதென்று வெட்டவெளிச்சமாகக் கூறுகிறார். இந்தச் சுவடிகளால் உலக மக்கட்கு என்ன பயன் என்றும் கேட்கிறார், இப்படியே,

சாத்திரங்க ளெல்லாந்
தடுமாற்றஞ் சொல்வதன்றி
நேத்திரங்கள்
போற்காட்ட நேராவே,

என்று கூறுகிறார். சாத்திரம் எல்லாம் தடுமாற்றமாகவே சொல்லும். கண்ணுக்கு நேரே காட்டக்கூடிய வகை அதில் ஒன்றுமிராது. அத்தனையுஞ் சூது என்பது இராமலிங்க அடிகளின் வாக்காக இருக்கிறது. இன்னும்,

சாதிகுல மென்றும்
சமயமத மென்றுமுப
நீதியில் ஆச்சிர
நீட்டென்றும்—ஓதுகின்ற
பேயாட்ட மெல்லாம்
பிதிர்ந்தொழிந்தவே பிறர் தம்
வாயாட்டம் நீங்கினவே மற்று!

என்று கூறுகிறார். வருணாச்சிரமம், மதம், சமயம் என்று சொல்லப்படுகின்றவையெல்லாம் பேயாட்டமென்று கூறுவதை அன்பர்கள் சிந்தை செய்தல் வேண்டும். பேயாடுவதென்பது மனத்தில் ஏற்பட்ட பயங்காரணமாகச் சுவாதீனமற்று—தன் சுயபுத்தியில்லாமல்—தலைவிரிகோலமாக ஆடுவதென்று கூறப்படும். இந்த ஆட்டமே ஜாதி, குலம், சமயம், ஆசிரமம் என்பனவெல்லாம் என்றும் அப்பெரியார் கூறுகின்றார். மேலும்,

சாதியிலே மதங்களிலே
சமயநெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே
கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித்து
அலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணேநீர்
அழிதல் அழகலவே.

இப்பாடலில் சாதி, மதம், சாத்திரம், கோத்திரம் என்பனவற்றில் பிறக்கும்போதிருந்தே ஒரு பற்று உண்டாக்கப்படுகிறதென்பதையும் அந்த அபிமானத்தால் தன் மதம், தன்ஜாதி, தன் சாஸ்திரம் என்ற உணர்வு மேலிட்டு ஆராய்ச்சிசெய்து உண்மைகாணும் அறிவு மழுங்கி கண்மூடிப் பொய்ச்சாத்திர மூட்டையில் நடவுவதை வெறுத்துக்கூறுகின்றார். உண்மைகாணுதற்கு அந்தச் சாத்திரத்தையும் சாதியையும் கோத்திரத்தையும் பற்றிப் பிடித்துக்கொண்டதால் பயன் பெறாமல் அலைந்தலைந்து ஏன் வீணே அழிந்து போகின்றீர்கள் என்று கேட்கிறார். அது அழகல்லவென்றும் கூறுகிறார்.

இயல்வேதாகமங்கள்
புராணங்கள் இதிகாசம்
இவைமுதலா இந்திரசா
லங்கடையாய் உரைப்பர்
மயலொருநூல் மாத்திரந்தான்
ஜாலமென அறிந்தார்
மகனேநீ நூல்அனைத்தும்
ஜாலமென அறிக.

மயக்கந்தைத்தரும் நூல்தான் ஜாலம் என்று சிலர் அறிந்தனர். ஆனால் நீ எழுதிவைத்த நூல்முழுமையும் ஜாலம்—ஏமாற்றம் என்று உணர் என்று கூறுவது கவனிக்கத்தக்கது. இதோடு மட்டும் விடவில்லை,

நால்வருணம் ஆசிரமம்
ஆசாரம் முதலாம்
நவின்றகலைச் சரிதமெலாம்
பிள்ளைவிளையாட்டே
மேல்வருணம் தோல்வருணம்
கண்டறிவார் இலைநீ
விழித்திதுபார் என்றெனக்கு
விளம்பிய சற்குருவே
சாதியும் மதமும்
சமயமும் தவிர்த்தேன்
சாத்திரக் குப்பையும் தணந்தேன்.

இப்பாடல்களால் வருணம் ஆச்சிரமம் என்பது புத்தியறியாத சிறுபிள்ளைகளின் விளையாட்டென்கிறார். மேல் வருணத்தையும் தோல் வருணத்தையும் கண்டவர் யார்? கண்ணை மூடிக்கொண்டு குருட்டாட்டம் ஆடாதே! விழித்துப்பார்! என்றுரைப்பது நோக்கத்தக்கது. 'சாத்திரக்குப்பை' என்ற அருமையான சொற்றொடர் திரு ராமலிங்கப் பெருந்தகையார் அருள்வாக்கினின்றும் எழுந்து அது திருவருட்பாவினுள் வயிரமணிபோல் விளங்குவதைச் சமயக்குருடர் அறியார். இன்னும் அவர்,

கலையுரைத்த கற்பனையே
நிலையெனக் கொண்டாடும்
கண்மூடி வழக்கமெலாம்
மண்மூடிப்போக

என்று வாழ்த்துகிறார். சாத்திரத்தில் சொல்லப்படும் கற்பனைகளை அதாவது கட்டுக்கதைகளை உண்மையென்று நம்பிக்கொண்டாடுகின்ற குருட்டு வழக்க மெல்லாவற்றையும் குழிவெட்டிப் புதைக்கவேண்டும் என்று கூறுவது ஒவ்வொருவரும் கூர்ந்து நோக்கத்தக்கதாகும். இவ்வியல்பமைந்த எவ்வளவோ பாட்டுகளை ஓதிய அவர் கூறும் ஒரு பாட்டினை முடிவாகக்கூறி முடிக்கிறேன்.

# மேல்நாட்டு ஆரியர் கதை என்ன?

2-8-45ல் தேதி கரூரில் நடந்த, கரூர் தாலுகா சுயமரியாதை மாநாட்டின் வரவேற்புக் கழகத் தலைவர் தோழர் எஸ். ரத்தினம் அவர்கள் ஆற்றிய வரவேற்புரை:

பெரியார் அவர்களே! தாய்மார்களே!! தோழர்களே!!!

தங்கள் அனைவர் வரவும் நல்வரவாகுக.

சுயமரியாதை இயக்கம் நமது பெரியார் அவர்களால் துவக்கப்பட்டுச் சுமார் இருபது வருஷத்திற்கு மேலாக எவ்வித எதிர்ப்புகளுக்கிடையிலும் இடிந்தும் சளைக்காது தனது கொள்கைகளை நாடு பூராவும் பரப்பி வருகிறதென்பதை யாரும் மறுக்கமுடியாதென்பதோடு அதற்கு மாறான கொள்கைக்காரர்கள் வெளியில் வந்து பேச அஞ்சக்கூடிய அளவுக்கு சுயமரியாதை இயக்கம் வேலை செய்திருக்கிறதென்று நான் தைரியமாய்—பெருமையாய்க் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சற்று விளக்கமாகச் சொல்ல வேண்டுமெனால், இன்றைக்கு யாராவது தைரியமாய் பிறவியால் உயர்வு தாழ்வு இருக்கத்தான் வேண்டுமென எனது சொல்ல முன்வர முடியுமா? அல்லது, ஆண்டான்—அடிமை என்றோ, முதலாளி—தொழிலாளி என்றோ, அநுபவிப்பவன்—உழைப்பவன் என்றோ, தனித்தனியாக இருக்கத்தான் வேண்டும் என்றோ சொல்ல முன்வர முடியுமா? அவ்வளவு ஏன்? நாங்கள்தான் ஆளப்பிறந்தோம். மற்றவர்கள் அடிமை என்று இறுமாப்புக் கூறிய மேல்நாட்டு ஆரியர் (ஜெர்மனியர்) கதை என்னவாக முடிந்தது? அந்த அடிமிக ஆகாயத்தில் பறந்துவிட்டபோது இந்த நாட்டு ஆரியர் (பார்ப்பனர்) வகுத்து வைத்துக் கொண்டு வாழ்ந்துவரும் அமைப்பு முறை இனி என்ன செய்ய முடியும் என்பதை யோசித்துப்பார்க்க வேண்டுகிறேன்!

இது ஒருபுறமிருக்க, ஒருசிலர் நம்மவர்களென்ற பாத்தியதையை மட்டும் கொண்டாடிக்கொண்டு இயக்கத்துக்காகத் தாங்கள் ஒரு வேலையும் செய்யாது இருந்து வந்ததோடு மில்லாமல், தங்களுக்கு நாட்டில் செல்வாக்கு அற்றுப் போனது கண்டு வெட்கங்கெட்டு வெறும்பொறாமை கொண்டு சதா நம் தலைவர், தோழர்கள் மீது குற்றங்குறைகளைக் கற்பித்தும் பொறாமை வேஷமும் அறிக்கை விடுவதுமாக, அதுவே அவர்கள் வேலைத் தொண்டாகக் கருதிக் கொண்டு திருப்தியடைந்து வருகிறார்கள். இனிமேல் தாங்களாகத் தனித்து இருந்து தலைவர் இல்லாமல் தாங்களே ஒவ்வொருவரும் தலைவர்களாகி ஏதோ செய்யப் போவதாக விளம்பரம் செய்து கொண்டுமிருக்கிறார்கள். அதைப் பற்றி நமக்குச் சிறிதும் கவலையில்லை. ஆனால் ஒன்று மட்டும் கூற ஆசைப்படுகிறேன்; அதாவது "சுயமரியாதை இயக்கம்" என்பது, தலைமைக்கும், அதிகாரத்துக்கும்; பட்டம், பதவி; பிழைப்புப் பெறுவதற்கும் ஏற்பட்ட ஸ்தாபனமல்ல என்பதோடல்லாமல், அதற்கு மாறாகச் சில கொள்கைகளை, அதாவது மக்களுக்குத் தேவையான, மக்களுக்கு நன்மை பயக்கக் கூடியதானவைகளை அடிப்படையாகக் கொண்டு எவ்வித தொல்லைகளைப் பற்றியும் லட்சியம் செய்யாமல் தன்னைப் பலி கொடுத்து தொண்டாற்றி வருகிற ஒரு இயக்கமாகும். அம்மாதிரியான இயக்கத்திற்கு எவர் தனித்துக்கொண்டாலும், எவர் எதிர்த்தோ வேலை செய்தாலும் கேடு எதுவும் ஏற்பட்டுவிடாது.

ஆகவே, பிறர் என்ன சொல்லுகிறார்கள் என்பதைப் பற்றிக் கவலை கொள்ளாமல் நாம் நமது இயக்கத்துக்காக கொள்கைகளுக்காக எப்பொழுதும்போல் இனிமேலும் நாம் பெரியார் அவர்களின் தலைமையில் கொள்கையில் தொண்டாற்றிவர துணிவுகொண்டு இங்கே வந்திருக்கும் உங்களனைவரையும் நல்வரவு கூறி, மிக சொற்ப நாட்களில் ஏற்க[illegible]ால் கட்டப்பட்ட இம்மாநாட்டில் உங்களுக்குடன் அசௌகரியங்களையும், வசதிக்குறைவையும் பொருட்படுத்தாது பொறுத்துக் கொண்டு எங்களை மன்னித்து மாநாட்டைச் சிறப்புடன் நடத்திக் கொடுக்கவேணுமாய் வேண்டிக் கொண்டு மீண்டும் ஒருமுறை அனைவரையும் வரவேற்கிறேன்.

(முதல் பக்கத்தொடர்ச்சி)

நாலுமறைக்கும் வார்த்தையிலையால்
நாயகன் சொல்வார்த்தையன்றி
நாலுமறைக்கும் வார்த்தையன்று!
நாட்டமர்நான்—எதுமறைப்பேன்
நான்கூர் எனக்கெனஓர்
ஞானவுணர்வே சிவம்
வானாடி யில்லா வழி.

இப்பாடலை அவர் பாடியபடியால் தான் அவர் சைவசித்தாந்தி யென்றும், ஆஸ்திகரென்றும், அவர் பாக்கள் அருள்வாக்குகளென்றும் கொள்ளப்பட்டன. சொல்லவேண்டியவெல்லாம் சொல்லிவிட்டுப் போதாக்குறைக்கு "அவனன்றி யோரணுவுமசையாது; ஆதலால் நான் சொன்னதெல்லாம் அவன் சொன்னதுதான்" என்று ஒரு போடு போட்டுவிட்டார். எப்படிச் சொன்னாலும் ஜாதி, சமயம், ஆச்சிரமம், சாஸ்திரம், குலம், கோத்திரம் எல்லாம் சூதாக ஏற்படுத்தியது, அவை ஒழிய வேண்டும், என்பதுதான் விஷயம். இதனை சுயமரியாதைக்காரர் தங்கள் அறிவைக்கொண்டு சொல்கிறோமென்கிறார்கள். இராமலிங்க அடிகள் கடவுள்—சிவபெருமான் என்னாக்கிலிருந்து சொல்கிறார் என்று ஒரு போடாகப் போடுகிறார். இதுதான் வித்தியாசம். இதற்காக—உள்ளதை உள்ளபடி சொல்வதற்காக சுயமரியாதைக்காரர் நாஸ்திகரா? அப்படியானால் இராமலிங்க சுவாமி மூக்காலே மூன்றுவீசம் நாஸ்திகரென்பதை ஒப்புக்கொள்ளத் தயார்தானா? அவனன்றி ஓரணுவும் அசையாதென்பது வாஸ்தவமானால் சுயமரியாதைக்காரர் சொல்லிக்கொள்ளாவிட்டாலும் அவர்களும் சிவபெருமானுடைய திருவருள் இல்லாவிட்டால் அசைய முடியாதல்லவா? எனவே சிவபெருமான்தானே அவர்களையும் அசைவிக்கிறார், ஆட்டுவிக்கிறார், பேசுவிக்கிறார் என்று கருதிக்கொள்வதுதானே நியாயமாகும்?.

அஞ்சாநெஞ்சன்

---

30-6-45 வெங்களூர் உப்புமாநகரில் தோழர் பூ. பார்த்தசாரதி அவர்களால் "எனது கனவு" எனும் சீர்திருத்த காலட்சேபம் நடத்தப்பட்டது.

# நிரந்தர அரசியல் ஏற்பாடு தேவை

## "இந்துராஜ்யம்" வெறுங்கனவே

6-8-45 மாலை, அகில இந்திய முஸ்லிம் லீக் தலைவர் ஜனாப் ஜின்னா அவர்கள் பம்பாயில் தனக்குப் பணமுடிப் பளித்த ஒரு கூட்டத்தில் பேசுகையில் சிம்லா மாநாட்டைக் குறித்துப் பின்வருமாறு விளக்கினார்:—

"ஐரோப்பியயுத்தம் முடிந்துவிட்டகாரணத்தாலும், ஜப்பானிய போர் முடிவுக்கு வந்துகொண்டிருக்கிற காரணத்தாலும், இந்திய இடைக்காலஏற்பாட்டிற்கு வசதி யிருப்பதைக்காட்டிலும், நிலைத்த அரசியல் திட்டத்திற்கே பாடுபட வேண்டும்.

சிறந்த கட்சிகளின் தலைவர்களுடன் ஒருவராக தோழர் காந்தியார் சிம்லாவுக்குச் சென்றது ஏன் என்பதே முதல் பிரச்சினை. சிம்லாவுக்குச் சென்றும், மாநாட்டில் கலந்து கொள்ளாதது ஏன்? காரணம் சாதாரணமானதே. ஆட்சி வைக்கும் கோல மேற்கவே அங்கு சென்றார். காங்கரசுக்கும் காரியக் கமிட்டிக்கும் ஆய்வுரையாளராக இருப்பதோடு, வைசிராய்க்கும் அவர் மூலமாகப் பிரிட்டிஷாருக்கும் ஆய்வுரையாளராக அமைந்தார். நாடோறும் காலை, மாலை இரண்டு வேளைகளிலும் காரியக் கமிட்டி கூடிற்று. தோழர் காந்தியாரே வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

"தோழர் காந்தி எவருக்கும் பிரதிநிதியில்லை. அவர் தனிப்பட்ட முறையிலேயே பேசவேண்டும். காங்கரசின் நான்கு அணா உறுப்பினராகக் கூட அவர் இருக்கவில்லை.

அரசியல் பிரச்சினைகளைத் தீர்க்க அவர் உண்ணாவிரதத்தை யேற்கக்கூடியவர் தன்னை சூனியமாகக் கருதிக்கொண்டு, அந்தராத்மாவின் ஆய்வுரையை வேண்டி நிற்பவர் என்றெல்லாம் சில சமயங்களில் கூறப்படும், இன்னும் சில சமயங்களில், காங்கரசின் சர்வாதிகாரி அவரே. இந்தியா முழுமைக்கும் தானே பிரதிநிதியென்று கூறுவார்.

தோழர் காந்தியார் ஒரு விசேஷப் பிறவி. அத்தகையவருடன் நாம் எப்படிப் பேசி முடிவுக்கு வருதல் முடியும்?

"முஸ்லிம் லீகை குறைவுபடுத்தி பலமிழக்கச் செய்ய காங்கரசார் தம்மைப் பயமுறுத்தினர், கெஞ்சினர். முஸ்லிம் லீகின் கோரிக்கையை அலட்சியப்படுத்தி வெற்றுரையாகப் பேசும்படிச் செய்ய, காங்கரஸ் தனது கொள்கையையெல்லாம் [illegible]

கும் இறங்கிப் பார்த்தது. "இந்தியாவை விட்டு வெளியேறு," "முழு சுதந்திரம்" என்று பறைசாற்றிய காங்கரசார் கொள்கையை மறந்து சிம்லாவுக்குப் போயினர்; தங்களுக்கு சில பதவிகளைப்பெற வேவல் பிரபுவின் காலில் விழுந்தனர்.

"வேவல் பிரபுவிடம் நல்ல பெயர் வாங்க முஸ்லிம் லீகை குறித்து குறை கூறி அதனை தட்டிக்கழிக்குமாறு கூறினர். இதில் முழுதோல்வியு மடைந்தனர். லீக்கோரிக்கையை நிராகரித்து விடுகிறேன் என்று வேவல் பிரபு கூறியதாகவும், இப்பொழுது அவர் அந்த வாக்கினை மீறி நடந்துவிட்டாரென்றும் குறைகூறுகின்றனர். நான் அதை நம்பவில்லை. வைசிராய் நிராகரிக்க விரும்பினாலும், நிராகரித்துவிடமாட்டார்.

"இந்த நாட்டில் பெருங் கட்சிகள் இரண்டே உள்ளன. வேவல் பிரபுவின் எண்ணமும் அதுவேயாகும். தோழர் காந்தியாருக்கும், எனக்கும் அழைப்புகள் அனுப்பப்பட்டதின் நோக்கம், நாங்களிருவரும் பெருங் கட்சிகளின் தலைவர்கள் என்ற முறையிலேயே ஆகும். பிரிட்டிஷார் இவைகளைக் கட்சிகளென்று அழைக்கின்றனர். அவை இரு பெரும் இனங்களாகும். ஏனைய மைனாரிட்டிகளும் பாதுகாக்கப்படவேண்டியது அவசியமே; இந்தியாவின் வடமேற்கு, வடகிழக்குப் பகுதிகளில் பெருவாரியாக உறையும் 10 கோடி முஸ்லிம்கள் மைனாரிட்டிகள் அல்லர். முஸ்லிம்கள் மேற்கண்ட பகுதிகளில் பாகிஸ்தானை நிலைநாட்ட விரும்புகிறார்கள்.

சிம்லாவில் காங்கரஸ் திட்டங்களை பிரிட்டிஷார் உடைத்துத் தள்ளியதுபோல, பிரிட்டிஷார் எனக்கு விசேட அதிகாரத்தைக் கொடுத்துவிட்டனரென்று காங்கரசார் அவர்கள் மீது குற்றஞ்சாட்டுகிறார்கள். இவர்களுக்கு விசேஷ அதிகாரம் என்பதின் பொருளே விளங்கவில்லை; அல்லது அவர்கள் முஸ்லிம் லீகைப் பலப்படுத்த விரும்புகிறார்கள் போலும்.

விசேட அதிகாரமே கிடையாது. தற்கால நிலையில் இடைக்கால சர்க்கார் அமைக்கவேண்டுமென்பதையே திட்டம் கூறிற்று. அது நீதியும், அர்த்தமுமற்றதென்பதை நான் முன்னரே காரணத்துடன் எடுத்துக் கூறிவிட்டேன். காங்கரஸ் விரும்புவதெல்லாவற்றையும் நாம் சம்மதிக்கவேண்டுமென்று அது எதிர்பார்க்க முடியாது.

காங்கரஸ் விரும்புவதென்ன? இந்துராஜ்யத்தை நிலைநாட்ட வேண்டுமென்பதே அதன் நோக்கம். இந்துஸ்தான் சுயேச்சையுடன் வாழவேண்டுமென்பதே லீகின் எண்ணமும் ஆகும். ஆயினும் அதே நேரத்தில் நாம் பெருவாரியாக இருக்கும் பகுதிகளில் பாகிஸ்தான் நிலைநாட்ட விரும்புகிறோம். இந்து ராஜ்யத்தை நிலைநாட்டி, முஸ்லிம்களையும் நேர்மையாகவோ, நேர்மையற்ற முறையிலோ அதில் கொண்டுவந்து சேர்த்துவிட வேண்டுமென்ற கனவை காந்தியாரும், காங்கரஸும் கைவிடும்வரையில் நாம் பிரிட்டிஷ் ஆசாங்கத்திலிருந்து இந்து ராஜ்யத்திற்கு மாறுவோம் என்பதை அவர்கள் எதிர்பார்க்க முடியாது.

"மாநாடு தோல்வியுற்றதென்று அனைவரும் கூறுகின்றனர். மாநாடு எப்பொழுதும் இருக்கிறதென்று நான் கூறுகிறேன். போர்க்காலமாயினும், 1940ம் ஆண்டில், நாம் பிரிட்டனுடன் ஒத்துழைத்து, நாட்டுத் தற்காப்பைத்தேடினோம். ஹிட்லரிடமிருந்தோ அல்லது மைக்காடோவிடமிருந்தோ எவ்விதத் தீங்கும் வரக்கூடாதென்பது நமது எண்ணம்.

நமது நல்லெண்ணத்தை நாம் ஒத்துழைக்க கேட்டது. முஸ்லிம்கள் மிகுந்துள்ள வடமேற்கு, தென்கிழக்குப் பிரதேசங்கள் குண்டுகளால் தாக்கப்பட்டிருக்கும். ஹிட்லர் வெற்றியடைந்திருப்பாரானால் சர்ச்சில் இன்னும் யோசனைகளே போயிருக்கும். வேவல் பிரபு லண்டன் சென்றிருந்த காலத்தில் ஐரோப்பியப் போர் நடந்து கொண்டுதானிருந்தது. ஆனால் இப்பொழுது ஐரோப்பியப் போர் முடிந்துவிட்டது. இரு கோடிப் பேரும் முடியும் நிலையிலுள்ளதென்பதை நினைவில் வைக்கவேண்டும். தற்பொழுது இடைக்கால ஏற்பாடுகள் குறித்துப் பேசுவதில் பயனில்லை, நிலைத்த அரசியல் திட்டத்திற்கே நாம் பாடுபடவேண்டும். இந்தியாவின் சுதந்திரம் பற்றி முடிவு ஏற்படவேண்டுமானால், பாகிஸ்தான் பிரச்சினை குறித்து முடிவு ஏற்படவேண்டும். பாகிஸ்தான் பிரச்சினையை நாம் என்றும் விட்டுக்கொடுத்து எவருக்கும் சரணடையப்போவதில்லை.

"நமது பிரதிநிதித்துவம் பற்றி சந்தேகப்படுவோரின் உள்ளம் உண்மையை அறிந்து கொள்ள தேர்தலில் போட்டிபோட விரும்புகிறோம், நீங்கள் சரியான முறையில் வேலை செய்தால், மக்களின் பேருதவியால், நாம் தேர்தலில் வெற்றிபெற முடியும். முஸ்லிம் லீக் என்ற ஒலி உலக முழுவதையும் இன்று ஒலிக்கிறது. முஸ்லிம்கள் இன்று தங்கள் நிலையுணர்ந்து தலை நிமிர்ந்து நிற்கின்றனர்.

சிம்லா மாநாடு முஸ்லிம் லீகை நிரா

# நெல்லூரில் பெரியார்

## பல சங்கங்களின் சார்பில் வரவேற்பு

நெல்லூரில் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் வந்திருந்த காலையில் அவருக்கு சீர்திருத்த சங்கம், ஆரிய சமாஜம், பிரம்ம சமாஜம், தாழ்த்தப்பட்ட வகுப்பு சங்கம் ஆகியவைகளின் சார்பில் வாசித்தளிக்கப்பட்ட வரவேற்புத் தான்.

"ஐயா,

நாங்கள் முழுமனதுடன் தங்களை வரவேற்கிறோம். தங்கள் வரவு நல்வரவாகுக.

எங்களில் பலருக்கு உங்கள் அரசியல் கொள்கைகள் அப்படியே பிடிக்காமல் இருந்தாலும் சமுதாயசீர்திருத்தத்தில்தாங்கள் காட்டி வரும் தைரியத்தை — உறுதியைப் போற்றுகிறோம். தாங்கள் பாலிய விவாகத்தைக் கண்டித்தும், விதவா விவாகத்தை ஆதரித்தும், பெண்களுக்கு சம உரிமை, கல்வி முதலியவைகள் அளிக்கப்படவேண்டுமென்றும் போராடி வருகிறீர்கள். ஜாதி முறை, மத குருக்களின் கொடுமை, மதங்களின் பேரால் நடைபெறும் அக்கிரம ஆகியவைகளை வீரத்தோடு எதிர்த்து வெற்றிகரமாகப் போராடி வருகிறீர்கள். காலத்திற்கேற்ப சமூகமும் மாறுதலடைய வேண்டும்; இல்லையேல், அச்சமூகம் அழுகிவிடும் என்பதை அனுபவத்தில் கண்டவர்கள் தாங்கள். தங்களுடைய அயராத உழைப்பால் சமூகத்தைச் சீர்திருத்த அருந்தொண்டாற்றி வருகிறீர்கள். தங்களுடைய இந்த சேவை சமூக முன்னேற்றத்திற்கு ஒப்பற்றதொன்றாகும்.

சமூக முன்னேற்றமும் அரசியல் முன்னேற்றமும் ஒன்றையொன்று பிணைந்து செல்லவேண்டும்; ஆனால்பின்னையதும் நாட்டில் அம்நிலைமையிலில்லை, பின்னணியிலிருக்கிறது. இதுவருந்தத் தக்கது. சமுதாயத்திலுள்ள இழிவுகளைக் குறித்து, அடக்கு முறைகளைக் குறித்து நாம் அதிகம் கவலைப்படுவதில்லை, ஆனால் அரசியல் கொடுமையை — அடிமையைப்பற்றி அதிகக் கவலை கொள்கிறோம்.

எனெனில், சமுதாயத் துறையிலுள்ள இழிவுகளை நீக்க ஆணிவேரில் கைவைக்கவேண்டியிருக்கிறது; ஆழமாகப் பதிந்துள்ள கொள்கைகளையும், பழமையான வழக்கங்களையும், நம்மவர்களில் சிலரையும் எதிர்த்துப் போராடவேண்டியிருக்கிறது. ஆகவே சமுதாயச்சீர்திருத்தப்பணி எளிதானதல்ல. அதற்கு ஒரு தனிப் பண்பு வேண்டும். அத்தகைய பண்பைப் பெற்றவர் தாங்களே. தாங்கள் மேடைப் பிரசங்கமட்டுமல்ல, செயலிலும் செய்துகாட்டும் உறுதி படைத்தவர் என்று உண்மையாகச் சொல்லுவோம். சமூகம் சீர்திருத்தப் படவேண்டுமென்று பலர் சொல்லலாம். ஆனால், தைரியமாக, பகிரங்கமாகச் சொல்லவும், செயலில் செய்யவும் வருபவர் ஒருவருமிரார்.

சமுதாய சீர்திருத்தத்திற்கு எவ்வளவு முட்டுக்கட்டைகள் இருந்தாலும், தண்ணீர் எவ்வாறு நீர்மட்டத்தைநாடிச்செல்லுமோ அதுபோல் சமுதாய சீர்திருத்தமடைந்தே தீரும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். ஆனால் சீர்திருத்தம் அடைந்தே தீரும் என்று ஒவ்வொருவரும் கையைக் கட்டிக் கொண்டிருந்துவிட்டால் ஒன்றும் நடைபெறாது, மக்கள் தைரியமாக முன்வரவேண்டும், அப்பொழுது தான் சமூகம் சீர்திருத்த முடியும். அனுபவமும் மனஉறுதியும் நமக்கு வெற்றிக்கு வழிகாட்டும் என்பது நிச்சயம். சமுதாய சீர்திருத்தம் சமுதாயம் இன்புற வாழவேண்டுமென்பதாயிருக்க வேண்டும்.

கடைசியாக, தாங்கள், எங்களுடைய அழைப்புக் கிணங்கி எங்கள் ஊருக்கு விஜயம் செய்தமைக்கு எங்களுடைய மனமுவந்த மகிழ்ச்சியையும் நன்றியறிதலையுந் தெரிவித்துக்கொள்கிறோம்."


### விற்பனை

சேலம் முனிசிபல் கண்காட்சி சாலை "குடி அரசு பதிப்பக புத்தகநிலையம்" எனும் 69 ந. கடையில் பகுத்தறிவுப் புத்தகங்களும், இயக்க வாக்கியங்கள் பொறிக்கப்பட்ட கைக்குட்டை, துண்டுகளும் செவ்வாய்ப்பேட்டை சுயமரியாதை சங்கத்தார் விற்பனை செய்கிறார்கள்.

வாலிருக்கும் பொதுத் தேர்தலை நடத்துவதற்காக ரூ. 100 000 கொண்ட பணமுடிப்பு ஒன்று, அன்று ஜனாப் ஜின்னாவுக்கு அளிக்கப்பட்டது. பாகிஸ்தான் பிரச்சினையை முன்வைத்து தேர்தலில் போட்டியிடப்படும்.

பம்பாய் மாகாண முஸ்லிம் லீகர் ரூ. 5 லட்சம் சேர்க்கத் திட்டமிட்டுத் தொடங்கியிருக்கின்றனர். அத்திட்டத்தின்படி இன்று அளிக்கப்பட்ட பணமுடிப்பு பம்பாய் முஸ்லிம் பலவகை வியாபாரிகளிடமிருந்து சேர்த்ததாகும். இப்பொழுது வசூலில் இருந்துவரும் மற்றொரு பணமுடிப்பு அடுத்த வாரத்தில் ஜின்னாவுக்கு அளிக்கப்படும்.


இன்றைய திராவிட உலகத்தின் அற்புதம்!
ஒவ்வொரு திராவிட மக்களுடைய உள்ளத்தையும்,
உடலையும் சிலிர்க்கவைக்கிறது!!



## திரு. N. S. கிருஷ்ணன்
### சிறந்த மேதாவி

மாஜி நவயுகம் (தினசரி பத்திரிகையின்) பத்திரிகையின் ஆசிரியரும், தமிழ்நாட்டில் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவரும், சீர்திருத்த நோக்கமுடையவரும், பகுத்தறிவாளியுமான தோழர் [illegible] அவர்கள் எழுதியது. மேலும் இப்பதிப்பில் கவிதைகளும், கட்டுரையும் சேர்த்துள்ளோம். உயர்ந்த பதிப்பு விலை 0—2—6. வியாபாரிகளுக்கு தக்க லாபம் தரப்படும்.

N. B. கொழும்பிலிருக்கும் நண்பர்களும் மற்ற நண்பர்களும் கடிதம் எழுதும்போது தங்கள் சரியான முகவரியை தெரியப்படுத்தவும்.

திராவிடன் பதிப்பகம், [illegible]பேட்டை 18, வேலூர். வ. ஆ

# நெல்லூர் கூட்டம்

## 2 பார்ப்பனர்களின் குதர்க்கம்

பெரியார் இராமாயணத்தை நாசம் செய்யவேண்டுமென்று சொன்ன போது சூத்திரனை ராமன் கொன்றது இராமாயணத்தில் இல்லையென்று ஒருவர் கூட்டத்தில் எழுந்து சொன்னார். அவரை ஜனங்கள் வெறுத்து வெளியில் தள்ள முயன்றனர். பெரியார் அவரைப் பேச அனுமதிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டதின்பேரில் அவர் அக்கதைக்கு சம்மந்தமில்லாத அர்த்தம் சொல்ல வந்தார். அதை மக்கள் பொறுக்காமல் அவரை அடக்க முயன்றனர். கடைசியாகப் பெரியார் அப்பார்ப்பனரைப் பார்த்து ஒரு இராமாயணம் உங்களிடத்திலிருந்தாலாவது நீங்கள் சொல்லும் கருத்து எந்த இராமாயணத்தில் இருந்தாலாவது தயவுசெய்து கொண்டுவாருங்கள். நீங்கள் சொல்லுகிற தத்துவார்த்தம் அதிலிருந்தால், அல்லது இக்கதையாவது இராமாயணத்தில் இல்லாதிருந்தால் (சம்பூகன் தபசு செய்தது) தனது கருத்தை மாற்றிக்கொள்வதாகவும் கூறி அக்கதை இருக்குமானால் அந்த இராமாயணத்தை நாசம் செய்ய நீங்கள் சம்மதிப்பீர்களா?, என்று கேட்டார். பிறகு அந்த பார்ப்பனர் எப்படி இருந்தாலும் தான் அந்தக் கதையை அதிலிருப்பதாக ஒப்பமுடியாது, பெரியாரிடம் நான் நேரில் பேசிக் கொள்கிறேன் என்று மக்களைப் பார்த்துக் கூறி உட்கார்ந்தார். ஆனால் அவர் நேரில் வந்து பேசவில்லை.

### மற்றொரு பார்ப்பனர்

4 வர்ணம், பிறவியில் கிடையாதென்றும் கீதையில் தொழில் பற்றி இருப்பது தவிர பிறவியைப் பற்றி இல்லை என்று இருப்பதாகவும் சொன்னார். அதற்குப் பெரியார் மனுதர்மசாத்திரம், ஸ்மிருதி, இன்றைய அரசாங்க சட்டம், பழங்கால அரசர்கள் நடந்து கொண்டமுறை, இன்றைய அனுபவம் ஆகியவைகளின் நான்கு வர்ணத்தோற்ற மற்றும் ஒரு வர்ணம் இருந்து வருகையில் கேவலம் பாரதம் என்கின்ற ஒழுக்கம்கெட்ட கதையில் கிருஷ்ணன் என்கின்ற ஒழுக்கமும் நாணயமும் அற்ற ஒருவனால் சொல்லப்பட்டதாகக் காணப்படும் குறிப்பை எடுத்துக் கொண்டு நடப்பை மறந்து பேசுவதென்றால் எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? அரபிநைட் என்ற கதைப் புத்தகத்தில் அல்லாவுதீன் அல்லது அற்புத விளக்கு என்ற ஒரு கதை இருப்பதுபோல் பாரதம் என்கிற ஒரு காட்டுமிராண்டி கால கதையில் கீதை என்கிற ஒரு அத்தியாயம் இருக்கிறது. அந்த ஒரு சாதாரண விஷயத்தை எடுத்துக் கொண்டு இவ்வளவு பெரிய காரியத்திற்குச் சமாதானம் சொல்ல வருவது பொருத்தமாகாதென்றும் யாரும் ஒப்புக்கொள்ள முடியாதென்றும் சொன்னார். அதை அப்பார்ப்பனர் ஒப்புக்கொண்டு வேதம் தான் கீதையாகச் சொல்லப்பட்டு இருக்கிறதென்றும், வேதத்தில் பிறவியில் ஜாதிக்கு இடமில்லை என்றும், இந்து மதத்திற்கு வேதம்தான் ஆதாரம் என்றார். அதற்குப் பெரியார் அப்படியானால், அதை வேதம்படிக்கப் பாத்தியமும், வசதியும் அளிக்கப்படாத என்னிடத்தில் வந்து சொல்வதைவிட வேதத்தைப் படித்துவிட்டும்; படிக்கும் பாத்தியமும், வசதியும் பெற்று இருக்கிற ஜனங்களிடம் போய்ச் சொல்லி பிறவியின் பேரால் ஜாதி இருக்கிறது என்று கருதி, பிறவியின் பேரால் ஜாதியை கருத்து அனுபவத்தில் பாராட்டுகிற தன்மை அயோக்கியத்தனம் என்றும், மடத்தனம் என்றும் சொல்லித் திருத்துங்கள், சர்க்காரிடம் சொல்லி சட்டத்தை மாற்றுங்கள், பிறவியினால் ஜாதி இருக்கிறது என்கின்ற புத்தகங்களை கொளுத்துங்கள், இங்கு வந்து அனாவசியமாய்ப் பேசி எங்கள் நேரத்தையும் உங்கள் நேரத்தையும் கெடுக்கிறீர்கள் என்று சொன்னார். பக்கத்திலுள்ளவர்கள் சிரிக்க அப்பார்ப்பனர் பதில் பேச முடியாமல் வெட்கப்பட்டு வாயடங்கிச் சென்றார்.

பெரியாரின் கடைசி கால சொற்பொழிவில் நம்முடைய சீர்திருத்தத்தின் முயற்சி இவ்வளவு தீவிரமாக வந்ததினாலேயே இப்பொழுது நம் எதிரிகள் மதத்தின் பேரால் வேத சாஸ்திரத்தின் பேரால் அவர்கள் செய்யும் அயோக்கியத்தனத்திற்கு ஆதாரம் இல்லை என்கிற அளவுக்கு வந்து இருக்கிறார்கள். இதுவே நம்முடைய ஒரு சிறிய முயற்சிக்கு ஏற்பட்ட வெற்றியாகும் என்றும், இதுபோல் தான் நாம் ஒவ்வொரு துறையிலும் தீவிரமாகச் செல்லவேண்டுமென்றும், உதாரணமாகத் திருவாங்கூர் வைக்கம் சத்தியாகிரக பிரச்சாரத்தின் பயனாய் அநேகவாரங்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் நாத்திகர்களாகவும், இந்துமதத்தைவிட்டு விலகினவர்களாகவும், இஸ்லாம் மதத்தில் சேர்ந்தவர்களாகவும் ஆகிவிட்டதாக தெரிந்து தீர்மானித்து காரியத்தில் இறங்கினபிறகே திருவாங்கூர் அரசாங்கத்தில் கோவில், குளம், சத்திரம், சாவடி ரோட் எல்லாம் நாயாடி என்கிற மிகுந்த தாழ்ந்த ஜாதியார் உள்பட யாவருக்கும் பொது பிரவேசத்திற்கு இடமாயிற்று. ஆகலால் நீங்கள் பேசுவதற்கு பயந்தால் இப்பார்ப்பனர்கள் உங்களை மதிக்கமாட்டார்கள் என்றும், அடியோடு அஸ்திவாரத்தையே பேர்த்துத் தள்ளி, கொளுக்கவும், நெருப்புவைத்துக் கொளுத்தவும் துணிந்தால்தான் கிரமமான மாறுதல் ஏற்படும் என்றும் கூறியதோடு சீர்திருத்த வேலை என்பது அழிவு வேலையின் பயனாக ஆகுமே தவிர ஆக்கவேலையின் பயனாக ஆகக்கூடியது அல்ல என்பதை பல உதாரணங்களால் எடுத்து விளக்கினார். அநேக விஷயங்கள் அவ்வூர் மக்கட்கு புதியதாக இருந்த படியால் இதை இப்பிரசங்கத்தை பெரிய ஞானமார்க்கம் என்றும் மற்றும் பலவிதமான மூடநம்பிக்கை கருத்துக்களைச் சொல்லி பாராட்டிப் பேசிக் கொண்டார்கள்.

29-7-45 உதகை சமரசசன்மார்க்க சங்கக்கூட்டம் தோழர் வி. வீராசாமி பி. ஏ. தலைமையில் கூடிற்று. கழகத்திற்கு டாக்டர் அம்பேத்கார் சேவியர் கழகமென பெயர் மாற்றப்பட்டது.

ஜப்பான்மீது இறுதித் தாக்குதலுக்கான
நடவடிக்கைகள் கொந்தளித்துப்
பெருகிக்கொண்டிருக்கின்றன
என்பது
ஒவ்வொருவருக்கும் தெரியும்
இதன் விளைவு என்ன என்பதை எண்ணிப்பார்த்து
மே. த. கவர்னரின்
துருப்புகள் உதவி நிதிக்கு
பணம் உதவி புரியுங்கள்.
(ஹானரரி டிரஷரர், கவர்னர் போர் நிதி C/o இம்பீரியல் பாங்க் இந்தியா என்ற விலாசத்துக்குப் பணம் அனுப்பவும்.)

குடி அரசு

1945-ஞ ஆகஸ்டு மீ 11-உ

# இந்தியாவின் விடுதலைக்கு யார் தடை?

இந்திய அரசியல் நிலையானது இன்று ஆளுகின்றவர்களுக்கும், ஆளப்படுகின்றவர்களுக்கும் இன்று எவ்வித தகராறும் இருப்பதாகச் சொல்லுவதற்கில்லாமல் போய்விட்டது. ஏதாவது இருப்பதாகச் சொல்லப்பட்டாலும் அதைப் பற்றிப் பெரிய தலைவர்களோ, அல்லது ஏதாவது ஒரு பெரிய அரசியல் ஸ்தாபனமோ ஆளுகிறவர்கள் மீது, குறை சொல்லுவதாகவும் காணப்படவில்லை.

மற்றபடி இந்திய அரசியலில் இன்று குறிப்பிடத்தக்க, கவனிக்கப்படத்தக்க, பரிகாரம் செய்யப்படத்தக்க விஷயம் ஏதாவது இருக்கிறது என்றால் அது இந்தியாவிற்குள், இந்தியர்கள் என்பவர்களுக்குள்ளாகவே இருக்கின்ற அபிப்பிராய பேதம் (கட்சி)களும், அரசியல் சமுதாய இயல் கட்சிக்குள் உள் கட்சிகளும், கட்சிகளுக்குள் போராட்டங்களும், கட்சியோடு கட்சி போராட்டங்களும் ஆகியவைகளேயாகும் என்பதோடு, யாருக்கு யார் தலைவர்? யாருக்கு யார் பிரதிநிதி? எந்தக் கூட்டத்திற்கு எந்த ஸ்தாபனம் பிரதிநிதித்துவமானது என்பவையுமாகும். இன்று அரசியலில் காங்கிரஸ், இந்துமகாசபை, முஸ்லிம்லீக், கம்யூனிஸ்டு, ஜஸ்டிஸ் என்கின்ற தான கட்சிகளும் இவைகள் ஒவ்வொன்றுக்குள்ளும் கட்சிகளும் இருந்து வருகின்றன.

இந்திய அரசியலில் தற்கால சாந்தியாகவாவது ஒரு சமாதானம் ஏற்படத்தகுந்த ஒரு மாறுதலைச் செய்ய பிரிட்டிஷ் பார்லிமெண்ட் சர்க்கார் சம்மதித்து கடந்த 3-வருடத்திற்குள் இரண்டுதடவை முயற்சித்தும் சர்க்கார் பேரில் குற்றம் சொல்லுவதற்கிடமில்லாத நிலையிலேயே இரண்டுதடவையும் வெற்றிபெறாமல்போனதோடு அதுவும் இந்திய மக்களின் தலைவர்கள் என்பவர்கள் நடத்தையாலேயே வெற்றிபெறாமல் போனதோடு நிலைமை மேலும் மேலும் மோசமாகி சர்க்காருக்கு நல்லபேர் ஏற்படும்படியாக ஆகிவிட்டது. அதாவது நாட்டுப் பிரிவினை வேண்டுவோர்களுக்கு பிரிட்டிஷார் நடு நிலைமை வகிக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்கும் தன்மையிலும் தற்கால நிலையில் எவ்வளவு தூரம் அதிகாரங்களை விட்டுக் கொடுக்க எவ்வளவு வாய்ப்பு இருக்கிறதோ அவ்வளவையும் இந்திய அரசியல் கட்சிக்காரர்களிடமே விட்டுவிடத் தயார் என்ற தன்மையிலும் அதற்கேற்ற திட்டத்துடன் சர் ஸ்டாபோர்ட் கிரிப்சு வந்தும் அது பயன்படாமல் போனதோடு கிரிப்சு திட்டத்தின் பயனாய் காங்கிரஸ் தலைவர்களுக்குள் பிளவு ஏற்பட்டு தோழர் இராஜகோபாலாச்சாரியார் காங்கிரசை விட்டு விலகவேண்டிய அல்லது விலக்கப்படவேண்டியவராகிவிட்டார். விலகியதோடு காங்கிரஸ் தேசியத்திற்குள் இரண்டு சரிசமமான அபிப்பிராயம் என்று சொல்லத்தகுந்த அளவு அபிப்பிராயத்தை காங்கிரஸ் அபிப்பிராயத்திற்குச் சரிசமமாக மக்கள் கருதும்படியான தன்மையை ஏற்படுத்திவிட்டது.

மற்றும் இந்த கதி அடைந்த கிரிப்சு திட்டத்திற்குப் பிறகு வந்த வேவல்திட்டம் கிரிப்சு திட்டத்தை விட மோசம் என்று ஒரு சாராரும் கிரிப்சு திட்டத்தைவிட மேலானது என்று ஒரு சாராரும் "இது எப்படி இருந்தாலும் சரி முன்புசெய்த தப்பிதத்தையே மறுபடியும் செய்யாமல் கிடைத்த பதவியை ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று ஒரு சிலரும் சொல்லும்படியான தன்மையோடு வேவல் பிரபு இங்கிலாந்தில் இருந்து கொண்டுவந்த திட்டத்தின் தன்மையைப்பற்றி அதன் சாதக பாதகத்தைக்குறித்து எந்தக் கட்சியும் எந்தத் தலைவரும் பிரச்சினைகூட கிளப்பாமல் சிந்திக்கவும் செய்யாமல் வேவல் பிரபுவைப் பாராட்டிப் புகழ்ந்து முகஸ்துதி செய்து கொண்டு இந்தியர்களுக்குள்ளாகவே ஒருவர் மீது ஒருவர் குற்றமும் குறையும் சொல்லி ஒருவரை ஒருவர் வெறுத்து துவேஷித்து ஒரு கூட்டத்தின் மீது ஒரு கூட்டம் போர் தொடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்தில் வேவல் திட்டம் வெற்றி பெறாமல் திரும்பிப் போய்விட்டது. இதற்கு ஜாதி, மதம், ஆகியவைகளே காரணமாக ஆகிவிட்டன.

எனவே "இன்றைய இந்தியாவின் அரசியல் முட்டுக்கட்டை" யானது இந்தியர்களுக்குள் இருக்கும் ஜாதி மத பேத உணர்ச்சியாலும் போராட்டத்தாலுமே தீர்க்கப்படாமல் இருந்து வருகிறது என்பதல்லாமல் வேறு காரணம் ஒன்றும் இல்லாமல் போய்விட்டது. இப்படிப் போய்விட்டது மாத்திரமல்லாமல் இந்தப் பேத உணர்ச்சியும், போராட்டமும் இந்தியாவில் பெரும்பான்மை மக்கள் என்று சொல்லிக்கொள்ளும் இந்துக்கள் என்பவர்களுக்கும், இந்தியாவின் பெரும்பான்மை எண்ணிக்கை மக்களுக்கும் பிரதிநிதி என்று சொல்லிக்கொள்ளும் காங்கிரசுக்கும் கேவலத்தன்மையும் இந்தியாவை மானம், வெட்கம் இல்லாத சமுதாயம், கூட்டம் என்று உலகோர் மதிக்கும்படியும் ஆகிவிட்டது.

காரணம் என்னவென்றால் காந்தியார், மௌலானா ஆசாத் ஆகிய காங்கிரஸ் இந்து தலைவர்கள் யாவரும் வேவல் பிரபுவை எதற்கு ஆக போற்றவேண்டும்? எதற்கு ஆகப் பாராட்டித் துதிபாடவேண்டும்? என்பது பற்றி சிந்தித்தால் விளங்கிவிடும். காங்கிரசார் ஆகட்டும், காந்தியார் ஆகட்டும், தங்களை ஜாதிபேதம் இல்லாமல் எல்லா மக்களுக்கும் தாங்களே பிரதிநிதி என்று சொல்லிக் கொண்டு இருக்கிறவர்கள் மானமுள்ள, சுரணையுமுள்ள அறிவும், மனிதத் தன்மையும் உள்ளவர்களானால் முஸ்லீமுக்கு 5, இந்துவுக்கு 5, இந்துக்களின் கீழ்ஜாதிக்கு 1, இந்த ஜாதி மதங்களில் சம்பந்தப்படாத சீக்கியருக்கு 1, மற்றும் தனக்கு வேண்டிய தனிப்பட்டவருக்கு 1, என்றெல்லாம் வேவல் பிரபுவால் வியாபாரமும் வெளிப்படையாயும் சொல்லி இஷ்டப்பட்டால் வாருங்கள் என்று கூப்பிட்ட அழைப்புக்கு காங்கிரசும் காந்தியாரும் எப்படி ஒப்புக்கொள்ளலாம் என்று சிந்தித்தால் காங்கிரசின் மானம்

நேர்மையை அற்ற தன்மையும் இக் கட்சியின் கோழைத் தன்மையும் நன்றாக விளங்கும்.

இந்த நிலைமையில் காங்கிரஸ் இணைவிருந்தும் சர்க்கார் மீது இதிலும் தப்பிதமில்லை என்று காங்கிரஸ் தலைவர் ஒப்புக்கொண்டும் கூட அரசியல் பிரச்சினை தீரவில்லையென்றால் இந்தியாவின் விடுதலைக்கும் அரசியல் (டெட்லாக்) நடைக்கும் இந்தியர்களின் ஜாதி மத தகராறுதான் காரணம் என்பதைத் தவிர வேறு காரணம் என்ன சொல்ல முடியும் என்று கேட்கின்றோம்.

தவிர,

காங்கிரஸ் இன்று தன்னை யாருக்குப் பிரதிநிதி என்று சொல்லிக்கொள்ள யோக்கியதை பெற்று இருக்கிறது என்பதும் ஒரு பரிசீலிக்கத்தக்க பிரச்சினையாகும். முஸ்லீம்கள் முஸ்லீம் லீகின் கீழ் இருக்கிறார்கள். ஜாதி இந்துக்கள் இந்து மகாசபையின் கீழ் இருக்கிறார்கள். ஜாதி அல்லாத ("கீழ்ஜாதி") மக்கள் ஷெட்யூல்டு வகுப்பு சங்கத்தின்கீழ் இருக்கிறார்கள். சீக்கியர், பார்சிகள் அவரவர்கள் சங்கத்தின் கீழ் இருக்கிறார்கள். திராவிட (தமிழ், ஆந்திர) நாட்டு 'பார்ப்பனரல்லாத' மக்கள் என்பவர்கள் ஜஸ்டிஸ் கட்சி என்பதில் இருக்கிறார்கள். இன்னும் சிலர் தேசீய வாதிகள், தேசீய முஸ்லீம், தேசீய நாடார், தேசீயப் பார்ப்பனரல்லாதார் அஞ்ஞார், மஜ்லிஸ், பொது உடைமை, சமதர்மம் என்கின்ற பலபெயராலும் அவற்றின் கீழும் இருக்கிறார்கள். இவர்களில் யாரும் காங்கிரஸை ஒப்புக்கொள்ளுவதில்லை. வேண்டுமானால் சிலவற்றில் உள்ள வெகு சிலர் காங்கிரஸை ஆதரிப்பதாக அபிமானிப்பதாகச் சொல்லலாம். ஆனால் அதோடு காங்கிரஸை எதிர்த்து நிற்கிறவர்கள் உதாரணமாக முஸ்லிம் லீக் இந்து மகாசபை, ஷெட்யூல் வகுப்பு, ஜஸ்டிஸ்கட்சி என்பனபோன்றவைகளில் காங்கிரஸைவிட இரண்டு மூன்று பங்கு எண்ணிக்கை கொண்ட மக்கள் இருந்து வருகிறார்கள். இவர்களுக்கு தனித்தனி தேர்தல்முறை அதாவது முஸ்லிம் தொகுதி, சீக்கியர் தொகுதி போன்று தனித்தனித் தொகுதியும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் காங்கிரஸ் என்பது சில தனிப்பட்ட மக்களின் சுயநல வியாபாரக் கம்பெனி என்பதல்லாமல் வேறு யாருக்கு பிரதிநிதித்துவம்? என்பது விளங்கிவிடும்.

பொது ஓட்டுரிமையையும் அதுவும் எழுத்துவாசனை அரசியல் அறிவு, கட்டுப்பாடு, இன உணர்ச்சி, நாட்டுப்பற்று, பொருளாதார அறிவு, இனமானம் ஆகியவை இல்லாத மக்களினுடையவும் சிலர் கால் அணா, இரண்டு அணா, ஒரு ரூ, மதுபானம் ஆகியவைகளுக்கு ஓட்டுகளைச் சரிசமமாய்க் கருதுகிற; பொதுநலம் என்பதைவிட தன்னலம் என்பதையே பெரிதாய்க் கருதுகிற ஓட்டர்களினுடையவும் ஓட்டுகளைப் பெற்றுத் தெரிந்தெடுக்கப்படுகின்ற, தெரிந்தெடுக்கப்படச் செய்யப்பட்ட மக்களின் எண்ணிக்கையைக் கொண்டு பிரதிநிதித்துவத்தைக் கணக்கிடுவதனால் அப்படிக் கணக்கிடும் கட்சி பிரதிநிதித்துவக் கட்சி ஆகிவிடுமா அல்லது அதையே பிரதிநிதித்துவத்திற்கு அறிகுறியாய்க் கருதும் சர்க்காராவது யோக்கியமும் நீதியும் உடைய சர்க்காராகிவிடுமா என்று யோசித்துப் பார்க்கவேண்டுகிறோம்.

ஆகவே இந்தியாவின் அடிமைத் தன்மை என்பதற்கு இந்தியர் என்பவர்களே பொறுப்பாளர்களாகுமே தவிர சர்க்கார் காரணஸ்தர்களாகமாட்டார்கள் என்று சொல்லப்படுவதை மறுக்க இந்தியர்களுக்கு இடமுண்டா என்று கேட்கிறோம்.

இதை ஏன் சொல்லுகிறோம் என்றால், இந்த சர்க்கார் ஒழிந்துவிட்டால் அதற்கப்புறமாவது இந்தியா சுதந்திர நாடு என்பது ஆக இருக்கமுடியுமா என்று ஒவ்வொருவரும் சிந்தித்து அரசியல் கிளர்ச்சி செய்யவேண்டும் என்பதற்கு ஆகவும், அறிவும் பொறுப்பு முள்ளவர்கள் அறியாதவர்களுடனும், கூலிகளுடனும், சுயநல வஞ்சகர்களுடனும் கூடிக்கொண்டு அரசியல் கூச்சல் போடக்கூடாது என்பதற்கு ஆகவுமேயாகும்.

# திராவிடர் கழகத்திற்கு

(ஜஸ்டிஸ் கட்சிக்கு)

**11-8-45 வரையில் அங்கத்தினர்கள் 33864**

**சந்தா ரூ. 3351—6—0**

## இவ்வார நிகழ்ச்சிகள்

சென்னை: திராவிட மாணவர் கழகத்தின் பொதுக் கூட்டம் ஒன்று 14-8-45 செவ்வாய் மாலை 6 மணி அளவில் சென்னை 59, பிராட்வே, "முல்லைப் பதிப்பகத்"தில் (மண்ணடிக்கு நேர் எதிரில்) கூடும். தோழர் க. அன்பழகன் பி. ஏ., (ஆனர்ஸ்) தலைமை தாங்குவார். கழகத்தின் நடைமுறைத் திட்டங்கள் வகுப்பது குறித்தும், சென்னைமாகாணத் திராவிட மாணவர் மாநாடு கூட்டுவது குறித்தும் ஆலோசிக்கப்படும்.

தூத்துக்குடி: தமிழ்நாடு அருந்ததிய குல மகாநாட்டை 1945 செப்டம்பர் மாத இறுதியில் தூத்துக்குடியில் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இடம், தேதி முதலிய விபரங்கள் பின் வெளிவரும். மகாநாடு சம்பந்தமான ஆலோசனைகளையும் அபிப்பிராயங்களையும் தீர்மானங்களையும் "பி. வி. இளஞ்சேரன், 199, பிரமுத்துதேவர் விளை, தூத்துக்குடி" என்ற விலாசத்திற்கு அனுப்பக்கோரப்படுகிறார்கள்.

ஈரோடு: ஈரோடு தாலுகா முதலாவது மருத்துவர் மகாநாடு ஈரோடு சரஸ்வதி ஹாலில் 25-8-45 காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறும்.

சென்னை: சென்னை ஜில்லா சுயமரியாதைச் சங்க நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் 15-8-45 புதன் மாலை 6½ மணிக்கு ஒற்றைவாடைத் தியேட்டருக்கடுத்த பிள்ளையார் கோவில் தெரு 11-வது இல்லமாகிய சங்கக் கட்டிடத்தில் நடைபெறும்.

அதுசமயம் கமிட்டி உறுப்பினர்களும், மற்றும் சென்னை நகரிலுள்ள சுயமரியாதை இயக்கத் தோழர்கள் அனைவரும் தவறாமல் வரவேண்டிக் கொள்ளப்படுகிறது. மழையாயிருப்பினுங்கூட கட்டிடத்திற்குள் கூட்டம் நடைபெறும்.

கமிட்டியின் நிகழ்ச்சிகள்

1. சென்னை ஜில்லா சுயமரியாதை மாநாடு
2. சிவாஜி நாடகம் பற்றி ஏற்பாடு

3. நாட்டைச் சம்பந்தமாகவும், தாள முத்து-நடராஜன் நினைவு கட்டிட சம்பந்தமாகவும் ஆகியுள்ள செலவுகளின் விவரங்கள்

4. சுயமரியாதைப் பிரச்சார நிதியிருப்பு

5. கமிட்டி உறுப்பினர்களால் கொண்டுவரப்படும் இதர தீர்மானங்கள்.

சென்னை: புதுப்பேட்டை திராவிடர் கழக ஆதரவில் ஒரு பொதுக் கூட்டம் 19-8-45 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு புதுப்பேட்டை வரதராஜபுரம் சுப்பன் தெருவில் (வரதராஜபுரம் போலீஸ் லைன் அருகில்) தோழர் கே. காமேசுவரன் தலைமையில் நடைபெறும்

தோழர்கள் கே. அன்பழகன் பி. ஏ. (ஆனர்ஸ்) சத்தியவாணிமுத்து, எஸ். கஜேந்திரன் பி. ஏ., வீராண்டை பி. ஏ., சி. தங்கராஜ், எம். எஸ். முத்து மற்றும் பல தோழர்கள் பேசுவார்கள்.

19-8-45 ஞாயிறு காலை 9 மணிக்கு சென்னையில் நெ. 135, அண்ணா பிள்ளை தெரு, பிரம்மசமாஜ கட்டிடத்தில் தோழர் ஜி. கே. சுந்தரத்திற்கும், டி. அம்லோணி அம்மையாருக்கும் வாழ்க்கை ஒப்பந்தம் 'விடுதலை' ஆசிரியர் தோழர் எஸ். குருசாமி பி. ஏ., அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர்கள் சத்தியவாணி முத்து, எஸ். குஞ்சிதம், வெற்றிச்செல்வி, திருவாணிபாலசுப்ர மணியம், மீனாம்பாள் சிவராஜ், அன்பழகன் முதலியோர் பேசுவார்கள்.

## புதுவைத் திராவிடர் கழகம்

5-8-45 ஞாயிறு மாலை 7 மணிக்குக் கனக-சுப்புரத்தினம் (பாரதிதாசன்) அவர்கள் இல்லத்தில், வழக்கறிஞர் ச. பெருமாள் அவர்கள் தலைமையில், கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு 60 உறுப்பினர்கள் வந்திருந்தனர். திறப்புவிழா வரவுசெலவு கணக்கு களைச் சரிபார்த்தற்கு, ஐவர் அடங்கிய கமிட்டியொன்று நியமிக்கப்பட்டது. பின்னர் பொதுக்கூட்டத்தினரால், 15 பேர் அடங்கிய செயற்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயற்குழுவினர்: தலைவர் கனக-சுப்புரத்தினம் அவர்கள், துணைத்தலைவர் எஸ். துரைராஜன், செயலாளர் எஸ். சிவப்பிரகாசம், துணைச்செயலாளர் பெ. இராமலிங்கம், கணக்குப் பரிசோதகர் ஈ. கோயல்.

மற்றும் தோழர்கள் கு. நடேசன், எ. சந்னோ, ஏ. காங்கேயன், எஸ். எ. மஜீத், வரதராஜுலு, எஸ். கோவிந்தராசு, பெ. நாராயணசாமி, நா. முத்துவீரன், கோவிந்தசாமி முதலியோர்.

பின்னர், காரைக்காலில் இக்கழகத்தின் கிளை நிறுவனம் ஏற்படுத்திக் கொள்ளவேண்டி அனுப்பியிருந்த விண்ணப்பக் கடிதம் படிக்கப்பட்டது. அது அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட பின், கூட்டம் இரவு 9-30 மணிக்கு முடிவுற்றது.

## தென்னார்க்காடு மாவட்ட திராவிடர் கழகம்

5-8-45 ஞாயிறு மாலை 4 மணிக்கு விழுப்புரத்தில் விழுப்புரம் நகராட்சித் தலைவர் தோழர் என். கோவிந்தராசலு அவர்கள் தலைமையில் நடந்த மாவட்டத்திலுள்ள பல திராவிடர் கழகங்களிலிருந்தும் வந்த பிரதிநிதிகளின் கூட்டத்தில் கீழ்க்கண்ட தோழர்களைக் கொண்ட தென்னார்க்காடு மாவட்டத் திராவிடர் கழகம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

தோழர்கள் என். கோவிந்தராசலு தலைவர், எம். முத்துத்தாண்டவசாமி செயலாளர்.

உறுப்பினர்கள்: தோழர்கள் விழுப்புரம் எம். சண்முகம், எஸ். இஸ்மாயில், கே. அப்துல் வகாப், அன்னியூர் எம். பச்சையப்பன், செய்யாத்துவிண்ணான் ஏ. இராமலிங்கம், திருப்பாப்புலியூர் மா. பீட்டர் பி. ஏ., புதுப்பேட்டை எஸ். கோவிந்தசாமி, கடலூர் எ. சி. கோவிந்தன், வி. கே. எஸ். சண்முகசுந்தரம், திண்டிவனம் இரா. வெங்கடேசன், டி. வ. எஸ். பழனி, திட்டக்குடி இராசாராம், மேல்சேரி வெ. கோபாலன், அவலூர்பேட்டை செ. பா. மல்லிகார்ச்சுனன், செல்புலவுசேரி கே. சுப்பிரமணியம், பூந்தோட்டம் பி. கோவிந்தசாமி, கள்ளக்குறிச்சி இராமசாமி, வாசுதேவன், விருத்தாசலம் சி. முனிசாமி, திட்டக்குடி எம். கிருஷ்ணசாமி, புதுச்சேரி ச. பெருமாள் வக்கீல், புதுச்சேரி பி. இராமலிங்கம், எஸ். துரைராசு ஆகியோர் இம்மாத இறுதிக்குள் விழுப்புரத்தில் ஒரு பொதுக் கூட்டமும், திட்டக்குடியில் மாவட்ட மாநாடும் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

## கண்டனம்

"திருவல்லிக்கேணி மாவட்ட திராவிடர் கழகத்தின் ஆதரவில் சென்ற 5-8-45 ஞாயிற்றுக்கிழமை தோழர் வ. கி. பாலசுந்தரம் பி. ஏ., எல். டி., தலைமையில் உறுப்பினர்களின் பொதுக் கூட்டம் நடந்தது.

"22-7-45-ல் சி. ஆர். அவர்களும் இந்திய அரசாங்கத்தின் உயர்தர உத்தியோகஸ்தர்களும் சேர்ந்து 'இந்து' செய்தித்தாளிலும் மற்றும் சில செய்தித்தாளிலும் விடுத்துள்ள செய்தியில் காலஞ்சென்ற சத்தியமூர்த்தி அவர்களின் நினைவின் பொருட்டு பொது மக்கள் பணத்தில் ஓர் இன்ஜினீரிங் கல்லூரி ஏற்படுத்தி அதில் மாணவர்களின் திறமையைப் பொறுத்து இடம் அளிக்கப்படும் என்ற நிபந்தனை ஒன்று ஏற்படுத்தியிருப்பதை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதுடன் அம்மாதிரியான கல்லூரி ஏற்படுவதற்கு யாதொரு அங்கீகாரத்தையும் ஆதரவையும் அளிக்கக்கூடாது என்று அரசாங்கத்தாரையும் பொது மக்களையும் கேட்டுக் கொள்கிறது" என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

## உமர்புலவர் விழா

உமர்புலவர் விழாவும், சையத் காதர் மரைக்காயர் நினைவு நாளும் ஈரோடு சித்திக் தொண்டர் படையினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட செயல் கமிட்டியாரால் பறக்காரத் தெருவில் அதற்கென அமைக்கப்பட்ட அலங்காரப் பந்தலில் 28-7-45-ம் தேதி இரவு 11 மணிக்குக் கொண்டாடப்பட்டது. ஷை கூட்டத்திற்குத் தலைமை வகிக்குமாறு ஈரோடு டிஸ்டிரிக்ட் முன்சிப் ஆலி ஜனாப் எம். எஸ். அப்துல் அஜீஸ் சாயபு பகதூர் அவர்களை பழயகோட்டை இளையகுமாரப் பட்டக்காரர் தோழர் என். அர்ச்சுனன் அவர்கள் பிரேரேபித்தார். தோழர் எச். பாட்சா சாயபு ஆமோதித்தார். தலைவர் முன்னுரைக்குப் பிறகு தோழர் ஈ. வெ. கி. சம்பத், உடுமலை தமிழ் வித்வான் கே. ஷைனார் முகம்மது, இரா. நெடுஞ்செழியன், திருப்பூர் மைதீன் ஆகியவர்கள் சொற்பொழிவாற்றியபின் மணி 3-ஆனபடியால், தலைவர் ஜில்லா முன்சீப் அவர்கள் தமது முடிவுரை நிகழ்த்திவிட்டு, தோழர் நெடுஞ்செழியன் அவர்களைத் தலைமை வகித்து கூட்டத்தை நடத்தக் கேட்டுக்கொண்டு சென்றுவிட்டார். தோழர் நெடுஞ்செழியன் தலைமையில் தோழர்கள் எம். எஸ். அஹமது, எ. மைதீன்பாட்சா, பண்டிட் ஜெய்லானி முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். தோழர் நெடுஞ்செழியன், கேட்ட கேள்விகளுக்குத் தக்க பதிலளித்தார். தலைவர் முடிவுரையுடனும் ஷை படையின் போஷகர் தோழர் என். ஆர். சுந்தரம் அவர்களின் வந்தனோபசாரத்துடனும் வைகறை காலை 4 மணிக்கு இனிது முடிந்தது. அன்று இரவு விடாது மழைபெய்தும் மக்கள் திரண்டு வந்து இருந்தது அதிலும் கோஷாப்பெண்கள் வந்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும். ஒலிபெருக்கியும் வைக்கப்பட்டிருந்தது.

## மதுரை மாணவர்

மதுரை மாணவர் கழகத்தார் "தகுதியும் திறமையும்" எனும் தலைப்பில் ஒரு சுவால் நோட்டீஸ் அச்சிட்டு மதுரைக் கல்லூரி விர்வாகிகளுக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

## கரூரில் சுயமரியாதை மாநாடு

2-8-45 கரூர் தாலூகா சுயமரியாதை மாநாடு கரூர் அம்பிகை டாக்கீஸில் நடைபெற்றது. காலை 9 மணிக்கு வாத்தியங்களுடன் தலைவர்கள் ஊர்வலமாக தியேட்டருக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கரூர் திராவிட சாரண இயக்கத் தொண்டர்கள் அணிவகுத்து கோஷங்களுடன் ஊர்வலத்தில் கலந்து சென்றனர். கொட்டகையில் சுமார் 2000 மக்கள் குழுமியிருந்தனர். மாகாணத்தின் பல பாகங்களிலிருந்தும் இயக்கத் தோழர்கள் வந்திருந்தனர். குறிப்பாக, தோழர்கள் சேலம் கே. ஜெகதீசன், டாக்டர் கோபால், நடேசன், எ. சித்தையன், ரோ. சு. அருணாசலம், மதுரை ராஜாரான், திண்டுக்கல் வீராசன், வேலூர் ஜனார்த்தனம், ஜோலார்பேட்டை மிட்டாதார் வி. பார்த்தசாரதி, திருப்பூர் எஸ். ஆர். சுப்பிரமணியம், பெத்தாம்பாளையம் பி. பழனிசாமி, ஈரோடு ஈ. வெ. கி. சம்பத், அ. மணி, அஸ். நவமணி இராசன், கருணானந்தம், வார்துசாமி, வி. ஷண்முகவேலாயுதம், எஸ். ஆர். சந்தானம், எஸ். ஆர். காந்தி, ஈ. எம். சிக்காரம், கோபி சுப்பண்ணா, ராசிபுரம் கே. வி. கே. ராமசாமி, நாமக்கல் கருப்பண்ணன், பொன்மலை அய்யாக்கண்ணு, திருச்சி பிரான்சிஸ், கட்டுப்பாளையம் ஆ. கணபதி, தவுட்டுப்பாளையம் ரகுநாதன், வேலூர் (சேலம்) புலவர் கள் பொன்னம்பலனார், அண்ணாப்பா, சென்னை ராமச்சந்திரன், புலியூர் பி. கந்தசாமி நாடார், பாலையா, வடிவேலம் பிள்ளை, ஆலமரத்துப்பட்டி உழவன் பழனிக்குமரன், சிரங்கம் ரங்கராஜு, ஐயம்பேட்டை வெற்றியரசன் மற்றும் நாமக்கல், லால்குடி, மன்னார்குடி, கோவை, குளித்தலை, தஞ்சை முதலிய இடங்களிலிருந்து ஏராளமான பிரதிநிதிகள் வந்திருந்தனர். உள்ளூர் பிரமுகர்கள் முருகேச நாடார் கருப்பண்ணபிள்ளை (முனிசிபல் கவுன்சிலர்கள்) தோழர்கள் டாக்டர், ஆறுமுகம், ஆண்டான் கோயில் நடேசபிள்ளை, கே. எ. ஷண்முகம், தேவஸ்தான டிரஸ்டி கே. என். பழனிச்சாமி கவுண்டர், கரூர் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர், மாணவர்கள், வேலூர் [illegible] உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் மாணவர்கள் மற்றும் பலரும் வந்திருந்தனர்.

மாநாடு காலை 10 மணிக்கு தொடங்கியது. தோழர் வி. பார்த்தசாரதி கொடியேற்றினார். தோழர் சி. என். அண்ணாதுரை மாநாட்டைத் திறந்துவைத்தார். தோழர் என். நத்தியப்ப வரவேற்றுப்பேசினார். தலைவர் தோழர் டி. பி. வேதாசலம் தம் முன்னுரையை நிகழ்த்திய பின் பெரியாரின் பேச்சுடன் காலைப்பகுதி முடிவுற்றது.

மாலையில் மாநாடு மீண்டும் கூடி பல முக்கியமான தீர்மானங்களை நிறைவேற்றியது. அத்தீர்மானங்களாவன:-

1. செங்கற்பட்டு, ஈரோடு, விருதுநகர் சுயமரியாதைப் பொது மாநாட்டுத் தீர்மானங்களை இம்மாநாடு முழுமனத்தோடு ஆதரிக்கிறது.

2 சமீபத்தில் திருச்சியில் நடக்கப்போகும் 4-வது சுயமரியாதைப் பொது மாநாட்டில், காரியத்தில் தீவிரமாய் நடத்தத் தகுந்த திட்டங்கள் இரண்டொன்றாவது ஏற்படுத்தி வேலைகளைச் செய்யத் தகுந்த அமைப்பு தொண்டர் படை முதலியவைகளைத் தீர்மானிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறது.

3 திராவிட சமுதாயத்துக்கும், மனித தர்மத்துக்கும் மாறான கருத்துக்களைப் புகுத்தும் சாஸ்திரம், புராணம், இதிகாசம், கலை—என்பவைகளையும், மேற்கண்ட கருத்துக்கொண்ட இசை, சித்திரம், நடிப்பு ஆகிய வற்றையும் வெறுப்போடு மக்கள் அவைகளை பகிஷ்கரிக்க வேண்டுமென்று இம்மாநாடு தீர்மானிக்கின்றது.

(இம்மூன்று தீர்மானங்களும் தோழர் ஜனார்த்தனம் எம். ஏ., யால் பிரேரேபிக்கப்பட்டு, தோழர் வீராசனால் ஆமோதிக்கப் பட்டன)

(4) சுயமரியாதை இயக்கத்தை விட்டுப்போனவர்களும், இயக்கத்திற்கு விரோதமான செயல் புரிந்தவர்களுமாகிய சிலர்கூடி சுயநல எண்ணத்தோடு சமீபத்தில் மதுரையில் சுயமரியாதைச் சங்கத்தை ரிஜிஸ்டர் செய்துள்ள செயலைக்

## ஆனைமலையில் பெரியார்

### திராவிட கழகமும் வாசகசாலையும்

ஆனைமலையில் 5-8-45 மாலை 6 மணிக்கு தோழர் எ. என். நரசிம்மன் பி. எ., அவர்களால் கட்டப்பட்டு திராவிட கழகத்துக்காக இலவசமாய் அளிக்கப்பட்ட புதிய கட்டடத்தை பெரியார் ஈ. வெ. ராமசாமி திறந்துவைத்தார். அதே கட்டடத்தில் டையரின் இலவச அளிப்பின் பயனாய் வைக்கப்பட்ட சுமார் 250 புத்தகங்கள் 2, 3 பத்திரிகைகள் கொண்ட இலவச புத்தகசாலையையும் வாசகசாலையையும் கோவை தோழர் யூசுப் மரைக்கார் துவக்கிவைத்தார்,

இவை நடந்தவுடன் எதிரிலுள்ள காலிபிடத்தில் ஆனைமலை பிரபல மிராசுதார் எ. வி இராமசாமி நாயக்கர் B. A., B Sc. அவர்கள் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ஜனார்த்தனம் எம் எ, யூசுப்மரைக்கார், ஈ. வெ. கி சம்பத்து, பெரியார் ஈ வெ. ராமசாமி ஆகியவர்கள் பேசினார்கள்.

கூட்டத்திற்கு சுமார் 1000 பேர்வரை வந்திருந்தார்கள். சாதாரணமாக கூட்டத்திற்குப் போகாத பெண்களும் பல பெரியோர்களும் கூட்டத்திற்கு வந்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

---

கண்டு உண்மைச் சுயமரியாதைக்காரர்கள் கட்சியைச் செய்ய வேண்டிய அவசியமில்லை என்றும், இயக்க வேலைகளில் இன்னும் தீவிரப் பங்கு கொண்டு உழைக்க வேண்டும் என்றும் இம்மாநாடு இயக்கத் தோழர்களை வேண்டிக் கொள்ளுகிறது.

(இத்தீர்மானத்தைப் பிரேரேபித்தவர் தோழர் சேலம் ஜெகதீசன். ஆமோதித்தவர்கள் தோழர்கள் உழவன் பழனிக்குமரன், சேலம் சித்தையன்)

பின்னர் பெரியாரவர்கள் சுமார் ஒரு மணிநேரம் பேசினார். தலைவர் முடிவுரையுடன் மாநாடு மாலை 5 மணிக்கு முடிவுற்றது.

(இம்மாநாடு வெற்றிகரமாய் நடந்ததற்கு கரூர் திராவிடசாரணர் இயக்கத் தொண்டர்களின் பணி போற்றத்தக்கது)

---


### விளம்பரம்

பகுத்தறிவு பாமாலை கைவசம் இல்லாதநால், நண்பர்கள் கடிதம் எழுத வேண்டாம் என்று இதன்மூலம் தெரிவிக்கிறேன்.

T. R வேங்கடசாமி, திருப்பூர்.

## திருமணங்கள்

12-7-45-திருநெல்வேலி ஜில்லா உத்தம பாண்டியன் குளத்தில் தோழர் டி. எம். சுப்பையாவுக்கும் சிவகாமி அம்மாளுக்கும் தமிழ்த் திருமணம் நடைபெற்றது.

* *

திருச்சி ஜில்லா அம்மங்குடியில் தோழர்கள் அரங்கசாமிக்கும் சின்னம்மாளுக்கும் திருச்சி தோழர் எம். நடராசன் எம். ஏ. பி. எல்., தலைமையில் தோழர்கள் சீனிவாசன், வேலு சொற்பொழிவுடன் நடைபெற்ற சீர்திருத்த வாழ்க்கை ஒப்பந்தத்தின் நினைவாக "குடி அரசு"க்கு 1ரூபாய் நன்கொடை தரப்பட்டது.

* *

13-7-45 திருச்சி தமிழ்நாடு விதவா விவாக சங்க ஆதரவில் கருணாநிதி பார்க்கில் ஜே. எஸ். ராமானுஜம் தலைமையில் தோழர்கள் ரெங்கமன்னாருக்கும், சாரதாம்பாளுக்கும் விதவை மணம் நடைபெற்றது.

* *

15-7-45-ந்தேதி திருத்துறைப்பூண்டி தாலூகா பஞ்சநதிக் குளத்தில் தோழர்கள் காசிநாதன்—தங்கையம்மை திருமணம் தோழர் ப. நடேசன் தலைமையில் தோழர்கள் சுவாமிநாதன், ராசு, ஆசிரியர் டி. வி. சிவஞான கோவிந்தசாமி ஆகியோரின் விரிவுரைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. இதன் நினைவாக 'திராவிடநாடு', 'குடி அரசு' இதழ்களுக்கு ஒவ்வொரு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

* *

15-7-45 ஓசூரில் தோழர்கள் சுந்தரம்—ஜகதாம்பாள் வாழ்க்கை ஒப்பந்தம் தோழர் வ. ராமசாமி கவுண்டர் எம். ஏ., எல். டி., தலைமையில் நடைபெற்றது. 'சீர்திருத்த மணம்' என்பது பற்றித் தோழர்கள் தேவசகாயம்பாவாணர், கே. ஜெயராமன், சி. ஜி. செட்டோ எம். ஏ., பி. எல்., எஸ். சுப்ரமணியம் செட்டியார், பி. ரத்தினசாமி பிள்ளை ஆகியோர் சொற்பொழிவாற்றினர். மாலையில் நடைபெற்ற தோழர் பி. எஸ். கோவிந்தன் இன்னிசை நடைபெற்றது.

* *

சுயமரியாதை இயக்கத் தோழர் செகந்நாதனுக்கும் மரகதம் அம்மைக்கும் மன்னார்குடியில் தோழர் பாப்பு செட்டியார் தலைமையில் 20-6-45-ல் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்று, பின் 14-7-45-ல் தஞ்சாவூரில் ரிஜிஸ்ட்ரார் இடம் பதிவு செய்து கொள்ளப்பட்டது.

* *

21-7-45 வாழ்நடையில் புரோகிதமொழிந்த திருமணம் செய்துகொண்ட தோழர்கள் கிருஷ்ணமூர்த்தி—விட்டோபாய் அம்மை ஆகியோரைப் பாராட்டு தற்காக நடந்த கூட்டத்தில் தோழர் டி. முனுசாமி தலைமையில் தோழர்கள் வி. எஸ். கிருஷ்ணசாமி, டி. கண்ணன், வி. ஆர். வெங்கடேசன் முதலியோர் பேசினர்.

o o

30-6-45 சேலம் மருத்துவர் விதவை சீர்திருத்தக் கழகத்தின் ஆதரவில் டாக்டர் கோபால் தலைமையில் நாராயணசாமி—அங்கம்மாள் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. தோழர்கள் கிருஷ்ணன், மணி, கருப்பையா, கோவிந்தன், சின்னதம்பி, மாரிமுத்து சொற்பொழிவாற்றினர். தோழர் கருப்பையா நன்றிகூறினார். "குடி அரசு"க்கு ஒரு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

* *

23-7-45 திருச்சி தமிழ்நாடு விதவா விவாக சங்க ஆதரவில் தோழர் பிச்சைமுத்து தலைமையில் தோழர்கள் முத்து—அமிர்தம் சீர்திருத்த மறுமணம் நடைபெற்றது. தோழர்கள் பிச்சைமுத்து, பெரியண்ணன், பெருமாள், சிவலிங்கம் சொற்பொழிவாற்றினர். இத்திருமணத்தின் நினைவாக "குடி அரசு" வளர்ச்சிக்கு ரூ.1 நன்கொடை அளிக்கப்பட்டது.

* *

15-7-45 சிதம்பரம் வட்டம் பெரியநற்குணம் தோழர்கள் நாராயணசாமி—சீலாவதி திருமணம் தோழர் சிங்காரவேலடிகள் தலைமையில் நடந்தது. தோழர்கள் சுப்பராமரை, சுகிர்நாதன், கணபதி, வரதன், சம்பந்தம் முதலியோர் சொற்பொழிவாற்றினர். இத்திருமணத்தின் நினைவாக "குடி அரசு"க்கு ஒரு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

* *

பெரியார் 66-ம் ஆண்டு ஆவணித் திங்கள் 28-ம் நாள், கண்ணன்புதூரில் தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் தலைமையில், தோழர்கள் ப. கணபதியும், இல. ஔவையும் சீர்திருத்த முறையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடத்திக்கொண்டனர். அதுசமயம் காஞ்சித் திராவிடர் கழகத்திலிருந்தும், கண்ணன்புதூர் சு. வெ. ரா. கழகத்திலிருந்தும், மற்றும் நண்பர்களிடமிருந்தும் சீர்திருத்த மணத்தைப் பாராட்டி மணமக்களுக்கு வாழ்த்திதழ்கள் வழங்கப்பட்டன. நன்கொடைகளும் அளிக்கப்பட்டன.

பின்னர் தோழர்கள் மதியழகன், நீலநாராயணன் அவுமி முதலியோர்கள் சீர்திருத்த மணம் பற்றிப் பேசினார்கள். மணமகன் நன்றி கூறலுடன் ஒப்பந்தம் இனிது நிறைவேறியது.

திருமண ஞாபகார்த்தமாக 'குடி அரசு' 'திராவிடநாடு' பத்திரிக்கை வளர்ச்சிக்கு முறையே இரண்டு ரூபாய் நன்கொடையாக அனுப்பப்பட்டிருக்கிறது.


* *

5-8-45 பீமநகரில் அண்மையில் திருமணம் செய்துகொண்ட தோழர்கள் கே. பழனிவேல், மாணிக்கவாசகம் ஆகியோரைப் பாராட்ட ஒரு தேநீர் விருந்து நடத்தப்பட்டது.


பித்தபாண்டு சோகைக்கு:- ஜெயராம்

அயக்காந்த லேகியம்

உடலைச் சிங்காரித்தாய்! உயிருக்கு என்செய்தாய்?



டாக்டர் ஜெயராம்ஸ்

காய சுத்தி லேகியம்

ஓயாத் தலைவலி, மயக்கம், வாந்தி, தொண்டைப் புண், நெஞ்சுவலி, நெஞ்செரிச்சல், மாரடைப்பு, அமைமாகம் வயிற்று உப்பிசம், பனித்தேப்பம், தீராத வயிற்றுவலி, முதுகுவலி, இடுப்புவலி, பசியின்மை, கால்வலி, லிவவலி, விஷாவாதம், கெறிக்கட்டி சுரம், உடல் வாதம், காமாலை, நீரடைப்பு முதலிய நோய்களையும், மூலநோய் சம்பந்தமான உள்மூலம், வெளிமூலம், இரத்தமூலம் முதலிய 9விதமான மூல நோய்களையும் நீக்கி, மலத்தைச் சுலமாய்ப் பிரிக்கும் அற்புத மருந்து. இரண்டு வேளையில் குணம் தெரியும், 1டப்பி உங்கள் கைவசம் இருந்தால் ஒரு உத்தமமான டாக்டர் உங்கள் கைவசம் இருப்பதைப்போல் எந்த சமயத்திலும் உபயோகப்படும். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரையில் உபயோகிக்கலாம். பத்தியமில்லை,

1ரேசர் டப்பி ரூ. 4 ½ரேசர் டப்பி ரூ. 2—2—0. V. P. P. வேறு.

ஜெயராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, கும்பகோணம்

# திராவிட மாணவர் பிரசாரம்

### கோவைமாவட்டம்

கொமெடியில் 20-5-45-ல் ஆசிரியர் தோழர் சாத்தக்குட்டிநாயர் பி. ஏ., எல். டி., தலைமையில் தோழர்கள் புலவர் வீரராகு, ஜி. என். ராஜு, எஸ். தவமணி இராசன் ஆகியோர் பேசினர். கூட்டத்திற்கு முன் குழலிசை விருந்து நடத்தப்பட்டது.

21-5-45-ல் ஆனைமலையில் தோழர் அச்சுதன் நாயர் தலைமையில் கூட்டம் நடைபெற்றது, தோழர்கள் ஜி. என். ராஜு, எஸ். தவமணி இராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

23-5-45-ல் பொள்ளாச்சியில் தோழர் கிருஷ்ணசாமி செட்டியார் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் ஜி. என். ராஜு, எஸ். தவமணி இராசன் ஆகியோர் பேசினர்.

24-5-45-ல் உடுமலைப்பேட்டையில் கிளைத் தலைவர் முகமது இஸ்மாயில் ராவுத்தர் தலைமையில் தோழர்கள், ஜி. என். ராஜு, எஸ். தவமணி இராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

28-5-45-ல் இருகூர் மாணவத் தோழர் தலைமையில் தோழர்கள் வஹாப், ஜி. என். ராஜு எஸ். தவமணி இராசன் மற்றும் சிலர் சொற்பொழிவாற்றினார்கள்.

28-5-45-ல் குனியமுத்தூரில் தோழர் இரா. நெடுஞ்செழியன் தலைமையில் தோழர்கள் வஹாப், ராஜு, தவமணி இராசன் ஆகியோர் பேசினர்.

29-5-45-ல் சிங்காநல்லூர் ஆதிதிராவிடர் கழகத்தில் கழகத் தலைவர் தலைமையில் தோழர்கள்புலவர் மன்னன், எம். என். அப்துல் வஹாப், தவமணி இராசன் ஆகியோர் பேசினர்.

31-5-45-ல் கோயமுத்தூரில் தோழர் ஜி. என். ராஜு தலைமையில் தோழர்கள் எம். என். அப்துல் வஹாப், தவமணி இராசன், புலவர் மன்னன், ஏ. பி. சனார்த்தனம், இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் பேசினர். பொதுவுடைமைக் கட்சித் தோழர்கள் கேட்ட கேள்விகளுக்கு தோழர் சனார்த்தனம் பதில் தந்தார்.

டை கூட்டங்களில் 7, 8-5-45ல் சென்னையில் சர் ஆர். கே. சண்முகம் தலைமையில் நடந்த பேரவி ஐஸ்டிஸ் மாநாட்டைக் கண்டித்துப் பேசி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### தஞ்சைமாவட்டம்

பட்டுக்கோட்டை: 10-7-45 மாலை கோர்ட்டாபீசுக்கு எதிரில் ஒலிபெருக்கியுடன் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் சி. என். விசுவநாதன் தலைமையில் தோழர்கள் எஸ். கருணானந்தம், எம். ஏ. அப்துல் ரகுமான், காஞ்சி கலியாணசுந்தரம், ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் பேசிய பின் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் முடிவுற்றது.

மதுக்கூர்: 11-7-45 மாலை மதுக்கூர் சந்தைப்பேட்டையில் ஒலிபெருக்கியுடன் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் காடிக்காடு வெங்கடாசலத்தேவர் தலைமையில் டை தோழர்கள் பேசிய பின் தோழர் என். பி. காளியப்பன் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

முத்துப்பேட்டை: 12-6-45 மாலை ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பஞ்சாயத்து போர்டு தலைவர் (காங்கிரஸ்) தோழர் சி. வி. ராமசாமி அவர்கள் தலைமையில் டை தோழர்களுடன் தோழர் என். பி. காளியப்பனும் பேசிய பின், தோழர் சாமிநாதன் நன்றி கூறினார்.

ஒரத்தநாடு: 13-7-45 மாலை ஒரத்தநாடு சத்திரத்தில் தோழர் ஷம்சுதீன் மரைக்காயர் தலைமையில் டை தோழர்கள் பேசினர்.

தலைஞாயிறு: 15-7-45 மாலை ரேடியோ மைதானத்தில் தோழர் ஆர். பக்கிரிசாமி தலைமையில் தோழர்கள் எஸ். கருணானந்தம், ஈ. வெ. கி. சம்பத் சொற்பொழிவாற்றினர்.

கீழையூர்: 16-7-45 மாலை சிவன் கோயிலுக்கெதிரில் தோழர் எ. கே. ரெங்கசாமி செட்டியார் தலைமையில் டை தோழர்கள் இருவரும் பேசியதும் தோழர் தட்சணாமூர்த்தி நன்றி கூறினார்.

புள்ளை மங்கலம்: 18-7-45 காலை 11-மணிக்கு புள்ளை மங்கலம் தோழர் வி. எஸ். சதாசிவம் வாழ்க்கைத் துணைவியார் சங்கர நாயகி அம்மாளது இறுதி நாள் விழாவில் பஞ்சாயத்துபோர்டு தலைவர் தோழர் மாசிலப்பபிள்ளை தலைமையில் தோழர்கள் எஸ். கருணானந்தம், ஈ. வி. கே. சம்பத் ஆகியோர் பேசினர். தோழர் மலையபெருமாள் நன்றி கூறினார்.

கிக்கில்: 18-7-45 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு தோழர் தியாகராஜன் தலைமையில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் திராவிடர் கழகத்தைத் திறந்துவைத்தார். தோழர் தபிரா மரைக்காயரும் பேசினார்.

இரவு 7 மணிக்கு தோழர் தியாகராஜன் தலைமையில் தோழர்கள் எஸ். கருணானந்தம், ஈ. வெ. கி. சம்பத் சொற்பொழிவாற்றினர். தோழர் ஏகப்ப முதலியார் நன்றி கூறினார்.

தாராசுரம்: 19-7-45 மாலை 7மணிக்கு தோழர் கே. கே. நீலமேகம் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், எஸ். கருணானந்தம் பேசினர். தோழர் ஜி. என். சாமி நன்றிகூறினார்.

ஐயம்பேட்டை: 20-7-45 மாலை 6 மணிக்கு செல்வம் இலவச வாசகசாலையை தோழர் ஈ. வி. கே. சம்பத் திறந்துவைத்தார். பின் கிருஷ்ணன் கோயில் எதிரில் தோழர் எஸ். கே. சாமி தலைமையில் தோழர் எஸ். வி. டேவிஸ் பி. ஏ., எல். டி., சர் பன்னீர் செல்வம் படத்தை திறந்துவைத்தார். பின் தோழர்கள் எஸ். கருணானந்தம், ஈ. வி. கே. சம்பத் பேசினர். காந்தியார் முதலாளிகளை ஆதரிக்கவில்லை என்றும் அவர் லெனினுக்கு ஒப்பானவரென்றும் பேசவிரும்பிய ஒரு காங்கிரஸ் மாணவருக்கு பத்து நிமிஷம் இடமளிக்கப்பட்டது. தலைவர் தம் முடிவுரையில் அவர் பேச்சுக்களை மறுத்து பதிலளித்தார். தோழர் ப. வெற்பாசன் நன்றிகூறினார்.

தோழர்களே!

சென்ற 1-7-45 முதல் 22-7-45 வரை நடைபெற்ற திராவிட மாணவர் சுற்றுப்பிரயாணத்தில் கூட்டங்கள் நடத்தியும், உணவளித்தும், உடன் வந்தும் உதவிய தோழர்கள் அனைவருக்கும் நன்றி செலுத்துகிறேன்,

வி. எஸ். பி. யாகூப்,
விஜயபுரம், திருவாரூர்.

டை சுற்றுப் பிரயாணத்தில் கலந்துகொண்டு உடன்சென்று உதவி, பல ஏற்பாடுகளையும் செய்த உழைப்பாளித் தோழர் வி. எஸ். பி. யாகூப் அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

செயலாளர்,
திராவிட மாணவர் பிரசாரக் கழகம்,
ஈரோடு.

### மாணவர் கழகத் தேர்தல்

31-7-45-ல் திருச்சி திராவிட மாணவர் கழகம் தொடங்கப்பட்டது. தலைவர்: இளங்கோ, செயலாளர்: ஆடலரசன், பொருளாளர்: நாராயணசாமி மற்றும் ஏழு பேர் செயற்குழுவினர்.

1-8-45-ல் ஆத்தங்குடி திராவிட மாணவர் கழகத்தின் கூட்டம் தோழர் இராமநாதன் தலைமையில் கூடி, தோழர்கள் அப. பெரிச்சியப்பன், சரா. லட்சுமணப்பன், திராம. இராமநாதன், சப. சண்முகம், பெரி. ராமநாதன், அழ. பெரியணன் ஆகியோர் முறையே தலைவர், செயலாளர், உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

20-7-45-ல் மதுரையில் தோழர் தங்கராசு தலைமையில் கூடிய திராவிட மாணவர் கழகக் கூட்டத்தில் தோழர்கள் சுந்தரவேலு தலைவர், இராமானுஜம் செயலாளர், இராமச்சந்திரன் துணைச் செயலாளர், வெங்கடசாமி பொருளாளர் எனத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

8-7-45-ல் குடந்தை திராவிட மாணவர் கழகத் தேர்தல் நடந்தது. தோழர்கள் எம். அமீர் அலி தலைவர், டி. ஜே

# திராவிட நாட்டுச் செய்திகள்

சேலம் சுயமரியாதை சங்கக் கட்டிடத்தில் 20-7-45 வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு ராவ்சாகிப் என். துரைசாமி தலைமையில் பெரியார் ஈ. வெ. ரா. தியாகராயர் இலவச வாசகசாலையை திறந்துவைத்தார்.

அன்று மாலை 7மணிக்கு மார்க்கட் மைதானத்தில் ஒரு பொதுக்கூட்டம் டாக்டர் கே. ஆர். கோபால் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஆர். நடேசன், கே. ஜெகதீசன், கபார், எஸ். தவமணி இராசன் ஆகியோர் பேசினர். பின் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் 2½ மணிநேரம் சொற்பொழிவு ஆற்றினார். தோழர் டி. என். ராசகோபால் நன்றிகூறலுடன் கூட்டம் முடிவுற்றது. கூட்டத்திற்கு நாதசுர அரசு, தோழர் டி. என். ராஜரத்தினம் வந்திருந்தார்.

* *

குடந்தை அரசினர் கல்லூரித் தலைவர் சாக்கோ அவர்களுக்கும், மற்றும் மாற்றலாகியுள்ள கல்லூரி ஆசிரியர்களுக்கும் 3-7-45-ல் மாலை 6 மணிக்கு கல்லூரியில் மாணவர்களால் ஒரு தேநீர் விருந்து நடத்தப்பட்டது. தோழர்கள் எம். அமீர் அலி, வெங்கட கிருஷ்ணன், ஆர். சொக்கப்பா முதலியோர் ஆசிரியர்களைப் பாராட்டிப் பேசினர். பின் தோழர் எஸ். தவமணி இராசன் நன்றி கூறலுடன் முடிவுற்றது.

4-7-45-ல் குடந்தைப் பிரமுகர்களும், மாணவர்களும் குடந்தைக் கல்லூரிப் பேராசிரியர் தோழர் எஸ். பழனிச்சாமி எம். ஏ., எல். டி., அவர்களுக்கு ஒரு தேநீர் விருந்து நாடார் மகாஜன சங்கத்தில் அளித்தனர். தோழர் சுப்பிரமணிய மூப்பனார் தலைமை தாங்கினார். தோழர்கள் எஸ். கருணானந்தம், ஆர். சொக்கப்பா, எஸ். தவமணி இராசன், கே. கே. நீலமேகம், வி. எஸ். அண்ணாதுரை எம். ஏ. பேராசிரியரைப் போற்றிப் பேசினர்.

8-7-45 காலை 9 மணிக்கு நாடார் மகாஜன சங்கக் கட்டிடத்தில் குடந்தை திராவிட மாணவர் கழக ஆண்டுவிழா பேராசிரியர் பி. எஸ். பிள்ளை எம். ஏ., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தோழர் டி. ஜெ. சந்தானசாமி ஆண்டறிக்கையை வாசித்தார். தோழர்கள் இரெ. இளம்வழுதி, எஸ். தவமணி இராசன், கே. அன்பழகன் ஆகியோர் பேசினர்.

மாலை 7 மணிக்கு காங்கேயன் பார்க்கில் தோழர் கே. அன்பழகன் பி. ஏ. (ஆனர்ஸ்) அவர்கள் தலைமையில் இரண்டாமாண்டு திராவிட மாணவர் கழகத் தொடக்க விழா நடைபெற்றது.

தோழர்கள் கே. நீலகராஜன், இரெ. இளம்வழுதி, எஸ். தவமணி இராசன், மு. அரசக்கண்ணனார் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் ஆர். சொக்கப்பா நன்றிகூறலுடன் கூட்டம் முடிவுற்றது.

அன்று இரவு தோழர் கே. அன்பழகன் முதலியோருக்குப் பேராசிரியர் பி. எஸ். பிள்ளை எம். ஏ. அவர்களால் பெரியதொரு விருந்து நடத்தப்பட்டது.

* *

தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்ட தாழ்த்தப்பட்டோர் சம்மேளனக் கூட்டம் 7-7-45ல் நடைபெற்றது. டாக்டர் சுப்பிரமணியம், ஆதிமூலம், ஜீவரத்தினம் ஆகியோர் பேசினர்.

* *

18-7-45ல் இராசிபுரம் முஸ்லிம்லீக் கூட்டம்கூடி நிர்வாகக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

* *

புதுப்பாளையம் மியூனிமா இயேட்டரில் தென்னார்க்காடு ஜில்லா மருத்துவர் சங்கக்கூட்டம் 9-7-45ல் தோழர் எ. அரங்கசாமி தலைமையில் நடந்தது. ஆண்டுவிழாவிற்கு நன்கொடைவேண்டி தீர்மானம் செய்யப்பட்டது.

* *

11-7-45 சுவாமிமலை இளைஞர் இலவசவாசகசாலைக்குத் தோழர் சு. சின்னய்யா செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

* *

8-7-45ல் திருச்சியில் தோழர் ஆர். வெங்கடாசலம் தலைமையில் தமிழ்நாடு திருவள்ளுவர் தொண்டர் மாநாடு நடைபெற்றது.

* *

9-7-45 சீடாமங்கலம் வர்த்தக சங்கக் கூட்டத்தில் சங்க இரண்டாவதாண்டு விழாவை விரைவில் நடத்த முடிவு செய்யப்பட்டது.

* *

மேசகனூர் தேவேந்திர இளைஞர் சங்கக் கூட்டம் தோழர் கே. பழனியப்பன் தலைமையில் 17-7-45-ல் நடந்தது. தோழர்கள் எம். பி. பெரியசாமி, எம். பி. கந்தசாமி, எம். ஆறுமுகம், ஆர். கோவிந்தசாமி, எம். கே. மருதமுத்து ஆகியோர் பேசினர்.

* *

திருச்சி மருத்துவர் சங்கத்தில் 17-7-45-ல் சித்த வைத்திய மருத்துவப் பள்ளி 10-வது கூட்டம் தோழர் கே. ஆர். துரைசாமி தலைமையில் நடைபெற்றது.

0 0

அருந்ததியர் [illegible] சங்கக் கூட்டம் 16-7-45-ல் தோழர் எஸ். மாடசாமி தலைமையில் நடைபெற்றது, கு. ஆ. விசாலம், எம். ஆர். பூமணிநாதன், பெ. க. காத்தமுத்து, சின்னகுருநாதன் ஆகியோர் பேசினர்.

* *

29-7-45 தாராவி "திராவிடநாடு பகுத்தறிவு நிலைய"த்தின் கூட்டம் தோழர் எஸ். டி. சவரிதாசன் தலைமையில் நடைபெற்றது. தோழர் அ. சு. சண்முகம் "மேயோகூற்று" என்ற நூலின் ஒரு பாகத்தை எடுத்து விளக்கமாகப் பேசினார்.

* *

அறந்தாங்கியில் 14-7-45-ல் தோழர் தொ. முத்துக்கருப்பன் தலைமையில் மருத்துவகுல சங்கக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் என். சதாசிவம், கே. மெய்யநாதன் முதலியோர்கள் பேசினர்.

* *

8-7-45 தாராவி தமிழ் மாணவர் மன்றத்தின் கூட்டம் தோழர் வி. சவரிதாஸ் தலைமையில் நடந்தது.

பம்பாய் நகரசபையார் இலவசமாக சிறுவர்கட்கு பால் வழங்கிவரும் திட்டத்தைப் பாராட்டியும், அச் சபையார் தாராவியில் மட்டும் சிறுவர்கட்குப் பால் வழங்கும் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவராமைக்கு வருந்துவதாயும் தீர்மானிக்கப்பட்டது.

சந்தானசாமி துணைத் தலைவர், டி. ராமதாஸ் செயலாளர், ஆர். சொக்கப்பா கூட்டுச் செயலாளர், பொருளாளர் [illegible] தேர்ந்தெடுக்கப்பட்டனர்.


## பகுத்தறிவு வால்யூம்

### விற்பனைக்குத் தயார்

35 ஜூன் முதல் மார்ச்சு 36 வரை 9, 10 மாதங்கள் கொண்டது விலை ரூ. 1-8-0, 1-10-0, புக்போஸ்டில் அனுப்ப 6 அணா, ரிஜிஸ்டர் புக்போஸ்டு செலவு அணா 9.

1937ஆம் வருட பகுத்தறிவு பைண்டு வால்யூம் விற்பனைக்குத் தயார் ஆகிவிட்டது. ('37ஜூன் முதல் '38ஏப்ரல் வரையுள்ள புத்தகங்களில் '37 மே மாதம் புத்தகம் நீக்கி 11-புத்தகங்கள்கொண்ட வால்யூம்) விலை ரூ. 1-12-0. தபால் செலவு வேறு. (புக்போஸ்டில் அனுப்ப 6அணா; ரிஜிஸ்தர் புக்போஸ்டில் அனுப்ப 9-அணா)

'38 மே முதல் '39 ஜனவரி முடிய 9-மாதங்கள் கொண்ட பைண்டு வால்யூமுக்கு விலை ரூ. 1-8-0. தபால் செலவு தனி. (புக்போஸ்டில் அனுப்ப 5-அணா. ரிஜிஸ்தர் புக்போஸ்டில் அனுப்ப 8-அணா)

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.


Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilnadu Press 4[illegible], Erode.